26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733

தூய பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 பாலம் 16 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் AUGUST 15, 2016

# அரசசேவைகள் இருமொழியில் இயங்கக் கனடா உதவி!

இலங்கை அரசாங்கம் தனது அரசசேவைகள் யாவற்றையும் கனேடிய அரசசேவைகள் போல் இருமொழியில் நடத்த உதவும் முகமாக கனேடிய அரசு ஐந்து வருடங்களுக்கு இலங்கை அரசிற்கு $11.2 மில்லியன் வழங்கும் என இலங்கையில் கனேடிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஸ்ரீபன் டியோன் (Stephane Dion) தெரிவித்துள்ளார்.



கனேடிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஸ்ரீபன் டியோன் 2016 யூலை 28 மற்றும் 29ஆம் திகதிகளில் இலங்கைக்கான தனது உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டார். இதற்கு முன்னர் இவ்வாறு கனேடிய வெளிநாட்டு அலுவலக்கள் அமைச்சர் ஒருவர் இலங்கைக்குப் பயணம் செய்தது 13 வருடங்களுக்கு முன்னர் ஆகும்.

அமைச்சர் ஸ்ரீபன் டியோன் தனது இலங்கைப் பயணத்தின் போது இலங்கை அதிபர் மைத்திரிபால சிறீசேன, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் R. சம்பந்தன் ஆகியோரையும் சந்தித்தார். அத்துடன் இலங்கையின் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் பற்றி ஆராயும் நாடாளுமன்ற உறுப்பினர் களைக் கொண்ட குழுவையும் சந்தித்தார்.

அமைச்சர் ஸ்ரீபன் டியோன் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீராவுடனான கலந்துரையாடலின் பின்னர் இலங்கையில் இரண்டு முக்கிய செயற்திட்டங்களை நடத்தக் கனேடிய அரசு பணஉதவி வழங்க இருப்பதாக ஊடகவியலாளர் களுக்குத் தெரிவித்தார்.

அத்திட்டங்களில் ஒன்று தேசிய மொழிகள் சமத்துவ முன்னேற்றத் திட்டம். இது இலங்கை அரசின் சேவைகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடத்த உதவுவதாகும். இத்திட்டத்திற்காக கனேடிய அரசு அடுத்த ஐந்து வருடங்களுக்கு $11.2 மில்லியன் பணத்தை முதலிட உள்ளது.

மற்றைய திட்டம் தொழில் முனைவோர் நிதி மையத்திட்டம். இது இலங்கையில் உள்ள 'SANASA' அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து ஒரு தொழிலதிபர் நிதி மையத்தை $8.8 மில்லியன் பணத்தை முதலிட்டு உருவாக்குதல் ஆகும். இந்த நிதிமையம் மிகச்சிறிய (Micro), சிறிய (Small) மற்றும் நடுத்தர (Medium sized) நிறுவனங்களை தொழில் முனைவோர் உருவாக்கித் தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்த, வேலை உருவாக்கம் செய்ய, பண உதவி வழங்கும். இதன் மூலம் தனியார் துறை வளர்ச்சி ஊக்கிவிக்கப்படும்.

தேசிய மொழிகள் சமத்துவ முன்னேற்றத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

வீடு,வியாபார நிலையம் வாங்க விற்க..
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
SUBRA Financial Solutions Inc.
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
MORTGAGE ALLIANCE

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%
Lock your mortgage while interest rates are low!

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

# HOUSE FOR SALE

## 7 Summer Ford Dr




**Bowmanville**
5 Bedrooms,
4 Washrooms,
2900Sqft

## 22 Havery Jones




**Bowmanville**
5 Bedrooms,
4 Washrooms,
3300Sqft

## 21 Berger Ave




**Markham**
4Bedrooms,
4 Washrooms,

1st , 2nd Mortgage for Home/ Business
We buy old houses for highest price
Home Renovation
Home renovation Loan

## CANADA WEALTH MANAGEMENT INC.

6055 Steels Ave E. Unit C102, Scarborough, ON. M1X 0A7

RANGAN Tel: 647.702.2159

வீடு வாங்க விற்க,
வீடுகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் 1st,2nd மோட்கேஜ்.
பழைய வீடுகள் பெறுமதி மிக்க விலையில் வாங்கப்படும்.
Home Renovation செய்து கொடுக்கப்படும்.

# JEN BOOKSTORE

## Wide Range of Books Are Available:

*School text books( According to Ontario Curriculum)
*Math Workbooks( From Kindergarten– Grade 12)
*Science Workbooks ( From Grade 1– Grade 12)
* French books
*Phonic Books
*English/ French Dictionaries
*Roman Catholic Bibles & Books on Spirituality
*Cook books by the famous Damu
*Convenience Items
*Accessories

80 Nashdene Road, Unit 212, Block C Scarborough
416-738-8824



# Friends MATRIMONY

திருமணத் உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...



சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண பொருத்தம் பார்க்கப்படும்

- 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்

info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
| --- | --- |
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# அரச...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கனேடிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஸ்ரீபன் டியோனும் இலங்கை உரையாடல் மற்றும் அரச கருமமொழிகளுக்கான அமைச்சர் மனோ கணேசனும் கையெழுத்திட்டார்கள். இவ்வைபவத்திற்கு இலங்கைக்கான கனடாவின் தூதுவரான உயர் ஆணையாளர் ஷெலி வைற்றிங் (Shelly Whiting) சமூகமளித்திருந்தார்.

அமைச்சர்கள் ஸ்ரீபன் டியோன் மற்றும் மங்கள சமரவீராவிற்கு இடையேயான கலந்துரையாடலில் இரு நாடுகளுக்கும் பொதுவான பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம், முதலீடு என்பன பற்றியும், இலங்கை அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான செயல்முறைகள், இலங்கை மக்களுக்கு இடையேயான உறவுகள் மற்றும் நல்லிணக்கம் பற்றியும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு செய்யும் முயற்சிகள் மற்றும் செயல்திட்டங்கள் பற்றியும் விரிவாக உரையாடப்பட்டது.

2016 யூலை 28இல் அமைச்சர் ஸ்ரீபன் டியோன் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டார். யாழ்ப்பாணத்தில் கனேடிய அரசின் நிதியுதவியில் நடைபெறும் திட்டங்களை அமைச்சர் பார்வையிட்டார். அவற்றுள் ஒன்று யாழ்ப்பாணம் விருந்தோம்பல் பயிற்சி மையம். அங்கு பயிற்சி பெறுகின்ற மாணவர்களால் மாதிரி உணவகம் மற்றும் விடுதிகளையும் பார்வையிட்டார்.



Dion donates books to Jaffna Library

அதைத்தொடர்ந்து அங்கு கனேடிய அரசு UNDP யுடன் சேர்ந்து நடத்தும் வேளாண் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை பார்வையிட்டார். இத்திட்டம் பால் மற்றும் விவசாயத் தொழில்களில் பொருளாதாரக் கூட்டுறவு முயற்சிகளுக்கு உதவுகிறது. அதன் பின்னர் யாழ். நூலகத்திற்கு சென்ற அமைச்சர் கனேடிய ஆளுனர் விருது பெற்ற பல ஆங்கில மற்றும் பிரஞ்சுப் புத்தகங்களை நன்கொடையாக நூலகத்திற்கு வழங்கினார்.

அமைச்சர் ஸ்ரீபன் டியோன் யாழ்ப்பாணத்தில் வடமாகாண முதல்வர் C.V. விக்கினேஸ்வரனையும் சந்தித்து உரையாடினார். அவ் உரையாடலின் போது இலங்கைத்தீவில் வாழும் தமிழ் சிறுபான்மை சமூகத்தின் மனக்குறைகள் தீர்க்கப்பட வேண்டிய அவசியத்தை வடமாகாண முதல்வர் கனேடிய அமைச்சரிடம் வலியுறுத்தினார். மேலும் முதல்வர் வடமாகாண மக்களின் சுதந்திரங்கள், உரிமைகளுக்கு மதிப்பளித்து அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தையும் கனேடிய அமைச்சரிடம் தெரிவித்தார்.

கனேடிய அரசின் நிதியுதவியில் இயங்கும் சித்த மருந்துகள் உற்பத்தி நிலையத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார். இது சித்த மருத்துவ பட்டதாரி மாணவர்களுக்கு ஆய்வு மற்றும் கற்றல் வாய்ப்புக்களை வழங்கும் ஆராய்ச்சி மற்றும் நூலக வசதிகளைக் கொண்ட ஒரு மையம் ஆகும். இந்த மையம் மூலிகை மருத்துவப் பொருட்களின் தயாரிப்புத் தரத்தை மேம்படுத்த உதவுவதோடு சித்த மருந்து வகைகளின் தயாரிப்பை அதிகரித்து நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும் வழிவகுக்கிறது.

உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு சென்ற அமைச்சர் அங்கு பிராந்திய விவகாரங்கள், பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் நாட்டின் நல்லிணக்கம் சம்பந்தமாக அரசு எடுக்கும் திட்டங்களில் ஊடகத்துறையின் தீர்க்கமான பாத்திரம் பற்றியும் உதயன் பத்திரிகை நிறுவனத்தாருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.



Students of [illegible] Hospitality Training [illegible] take a selfie with Minister Dion





TEKNO MEDIA
Your Protection Champion
presents
MARKHAM FAIR
10801 McCowan Rd
FREE Wi Fi
20/21 AUG
SAT-SUN
RAHUL NAMBIAR
SHASHAA TIRUPATI
KALPANA BALES
MADHU IYER
ADITYA RAO
வண்ணத் தமிழ் வானொலியின்
குதூகலம்
KUTHOOKALAM 2016
SATURDAY
SUNDAY
Powered By
Tamil Source's
தேடிப்பார்
www.thedipaar.com
FREE PARKING
FREE ADMISSION UNTIL 4PM
FREE FOR KIDS UNDER 5
Co-Presented By
RE/MAX
416.557.1111
Blue Ocean GROUP OF COMPANIES
ENTRANCE RAFFLE
Blue Ocean Realty Canada Inc. இன் அனுசரணையுடன்
2016 Jeep PATRIOT ஒன்றை அதிஷ்டத்தால்
வெல்லுங்கள்
Platinum Sponsors
Abi Singam
416-724-4224
747 AUTOPARTS
RIGHT PRICE, RIGHT CHOICE
Three locations to serve you better
Active Green + Ross
Tire Expert Christy
416.321.3443
Kennedy & Ellesmere
CELCOM
416-300-7569
NEW OCEAN SUPER MARKET
5635 FINCH AVE EAST
416-292-0122
Gold Sponsors
Packialuxmi Vasan
Sen Sooriyakumar
416 953 7604
MATRIX LEGAL SERVICES
(416) 505-9804 | (416) 831-4444
SkyRoute TRAVEL SERVICES INC.
416-439-4000
Silver Sponsors
MY MECHANIC AUTO & TIRE
905-946-1000
Therma Care Heating & Cooling Inc.
416-825-9373
Lowfare
416-261-0555
ALL SAINTS UNIVERSITY
416-743-9222
Chandni
Bronze Sponsors
Life 100
STANDARD MORTGAGES INC.
DOVE SQUARE PROPERTY MANAGEMENT INC
416-335-7575

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



## நல்ல ரேட்ல மோட்கேஜ்,
## லைன் ஒப் கிரெடிட்,
## ரீபைனான்ஸ்,
## 2வது, 3வது மோட்கேஜ்,
## பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
## எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
## வீடு வாங்க, விற்க

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

| BEST RATES FOR "AAA" CLIENTS | |
|---|---|
| 5 Yrs Variable : | Call Us |
| 2 Yrs Fixed Rate : | 2.09%* *OAC |
| 5 Yrs Fixed Rate : | 2.39 % * |

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00




உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

## 1504 Markham Rd,
## Toronto, ON, M1B 2V9
## (Markham & HWY 401)



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

And,,
*For All Your Real Estate Services*

# அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள குமாரபுரம் படுகொலை வழக்கின் தீர்ப்பு!

இருபது வருடங்களுக்கு முன்னர், திருகோண மலை மாவட்டத்திலுள்ள மூதூர் - குமாரபுரம் கிராமத்தில் நடைபெற்ற பாரிய படுகொலை தொடர்பிலான வழக்கு விசாரணையின் முடிவு அதிர்ச்சியும் ஏமாற்றமும் தருவதாக அமைந்துவிட்டது. அக்கிராமத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த தமிழர்களுக்குமே இது ஏமாற்றத்தை அளித்துள்ளது.

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசார ணை தேவையில்லை, உள்நாட்டுப் பொறி முறைக்கூடாகவே நியாயமான விசாரணை-களை மேற்கொள்ளலாம் என இலங்கை அரசாங்கம் கூறுகின்ற நிலையில், குமாரபுரம் படுகொலை வழக்கின் தீர்ப்பு போர்க்குற்றங் களுக்கான உள்நாட்டு விசாரணையை நம்ப முடியாது என்பதை உறுதி செய்வதாகவே அமைந்துள்ளது.

1996ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இரவு இடம்பெற்ற குமாரபுரம் படு கொலை சம்பவத்தில் பெண்கள், குழந்தை கள் உட்பட 26 பேர் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 39 பேர் படுகாயம் அடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 9 பெண்களும், 12 வயதிற்கு குறைவான 9 சிறுவர்களும் அடங்குவர். இதில் 16 வயதுடைய இளம் பெண்ணும், ஒரு கர்ப்பிணித் தாயும் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட னர். மது போதையில் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் இந்தப் பாதகச் செயலைச் செய்தனர். கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் குமாரபுரம் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவித் தமிழர்கள். இந்தப் படுகொலை வழக்கில் தெகியத்த இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவ வீரர்களுக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

1996ஆம் ஆண்டு மூதூர் மஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை யில் குறித்த 8 பேரும், சாட்சிகளினால் அடையாளம் காணப்பட்ட நிலையில் திரு கோணமலை மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் எதிரிகளின் வேண்டுகோளின் பேரில், அவர்களின் பாது காப்புக்கருதி சட்ட மா அதிபரின் ஆலோச னையின்படி, இந்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், சிவில் சமூகத்தினர் உட்பட 121 பேர் சாட்சிகளாக மூதூர் பொலிசாரால் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஜுரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த



இந்த விசாரணைக்கு குறித்த சாட்சிகளில் 20 பேர் அழைக்கப்பட்டுள்ள போதிலும் 16 பேர் மட்டுமே சமூகமளித்திருந்தனர். ஏனைய நான்கு பேரும் மரணமடைந்து விட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. எதிரிகளாகக் குறிப்பிடப்பட்ட எட்டு இராணுவ வீரர்களில் இருவர் மரணமடைந்து விட்டதாகத் தெரிவிக் கப்பட்டு, ஏனைய ஆறு பேருக்கு எதிராகவே வழக்கு விசாரணை நடைபெற்றது.

நீண்ட காலமாக இழுபட்டு வந்த இந்த வழக்கு கடந்த மாதத்தில் முடிவுக்கு வந்து, தீர்ப்பும் வழங்கப்பட்டது. 1996ஆம் ஆண்டில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு, 20 வருடங்கள் கழிந்த நிலையில் வழங்கப் பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் எதுவித குற்றமும் அற்றவர்களாகத் தீர்ப் பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள் ளனர். இக்கொலைச் சம்பவத்தை நேரில் கண்டவர்களும் அதிலிருந்து தப்பியவர்களு மான இக்கிராம வாசிகள் பலர், இவ்வழக்கில் சாட்சியமளித்துள்ளனர். கொலையாளிகளை நேரில் அடையாளம் காட்டியும் உள்ளனர். 1996ஆம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத் தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் குறித்த 8 பேரும், சாட்சிகளினால் அடையா-ளம் காணப்பட்ட நிலையிலேயே திருகோண மலை மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு பாரப் படுத்தப்பட்டிருந்தது. பின்னர் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

வறிய மக்களான இவர்கள் அச்சுறுத்தல்கள் மத்தியிலும், பல சிரமங்களின் மத்தியிலும் தங்கள் கிராமத்திலிருந்து அநுராதபுரத்திற்கு பயணம் செய்தும் சாட்சியமளித்துள்ளனர்.

## - விகிர்தன் -

இக்குற்றத்தைப் புரிந்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என இவ்வழக்கில், பாதிக்கப்பட்ட மக்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் கோரி வந்தனர். முன்னாள் இராணுவத்தினர் அறுவரே, இந்தக் கொலைகளை மேற்கொண்டமைக்கான நியா யமான சாட்சியங்கள் சந்தேகமின்றி உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக அரச சட்டத்தரணி சுட்டிக்காட்டியிருந்தார். முறைப்பாட்டாளர் சார்பில் வாய்மொழி மூலம் விடயங்களை எடுத்துக்கூறும் போது சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி சுதர்சன டீ சில்வா இந்தக் கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

சம்பவம் இடம்பெற்று பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், முறைப்பாட்டாளர்க ளின் சாட்சியங்களில் சில மாறுபாடுகள் ஏற்படலாம் என, அவர் மன்றில் தெரிவித்தார். எனினும், சாட்சியங்களில் காணப்படும் முரண் பாடுகள், குற்றச்சாட்டுகளில் இருந்து பிர-திவாதிகள் விடுபடும் அளவுக்குப் போதுமான தாக இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார். இந்த வழக்கின் தீர்ப்பு தொடர் பில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். எனினும், சாட்சிகள் மாறுபட்ட கருத்துக்களை கூறியதாகவும், குற்றங்கள் சரியாக நிரூபிக்கப்படவில்லை என்றும் கூறிக் கடந்த யூலை 27ஆம் திகதி நீதிமன்றினால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என 20 வருடங்களாகக் காத்திருந்த மக்கள், இப்போது ஏமாற்றமும் கவலையும் அடைந் துள்ளனர். தீர்ப்பு வெளியிடப்பட்டதும் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் கதறியழுத னர். தற்போது இந்த வழக்கினை மீண்டும் விசாரிக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அளிக்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக மேன் முறையீடு செய்யுமாறு சட்ட மா அதிபரை பணிக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண கல்வியமைச்சர் சி. தண்டாயுதபாணியும் இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

'சட்டமா அதிபரினால் தொடரப்பட்ட இவ் வழக்கில் அளிக்கப்பட்ட இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட வேண்டு மென பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை வேண்டியுள்ளார்கள். தாங்கள், அண்மையில் மூதூர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியைத் திறந்து வைப்பதற்காக வந்திருந்த வேளை யில், இவ்வேண்டுகோள் தங்களிடம் விடப்பட்டுள்ளதாக அறிந்தேன். ஆகவே, இவர்களுடைய வேண்டுகோளை தாங்கள் ஏற்றுக்கொண்டு, அளிக்கப்பட்ட தீர்ப்புக் கெதிராக மேன்முறைமீடு செய்யுமாறு சட்ட மா அதிபரைப் பணிக்க வேண்டுமென நான் தயவுடன் வேண்டுகின்றேன்.

சகல இன, சமூக மக்களதும் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆகவே, குமாரபுரம் கிராம மக்களது வேண்டுகோளை ஏற்று இவ்வழக்கில் மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொள்ளத் தேவையான பணிப்புரைகளை தாங்கள் விடுக்க வேண்டுமெனத் தயவுடன் வேண்டிக் கொள்கின்றேன்' என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பாரதூரமான வழக்குகள் நீண்ட காலமாக இழுபடுகின்றபோது குற்றவாளிகள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜூலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம்.

## பொதுத்தேர்தல்

இரண்டு கட்சிகளினதும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்து விட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் ஆரம்பமாகி விட்டது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016 இல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

## முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் பின்வருமாறு

ஜனநாயகக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

தற்போது தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. முக்கிய ஜனாதிபதி வேட்பாளர்களாக நான்குபேர் இருந்தாலும் தேர்தல் பிரசாரங்கள் மற்றும் தேர்தல் தொடர்பான செய்திகள் யாவும் பிரதான இரு கட்சிகளுக்கு இடையேதான் தேர்தல்



நடைபெறுவது மாதிரியே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பல செய்தி நிறுவனங்கள் தினமும் கருத்துக்கணிப்பு வாக்குகளை எடுத்து முக்கிய இரண்டு கட்சி வேட்பாளர்களுக்கும் கிடைக்கக் கூடிய மக்களின் வாக்குகளின் வீதத்தைத் தனித்தனியாகவும் Libertarian கட்சி, பசுமைக்கட்சி, மற்றைய வேட்பாளர்கள் எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வாக்குகளை ஒன்றாகச் சேர்த்தும் வெளியிட்ட வண்ணம் உள்ளன.

CBC நிறுவனம் இந்தக் கருத்துக்கணிப்புக்களை ஆராய்ந்து அவற்றை கருத்துக் கணிப்பீடு செய்த நிறுவனத்தின் நம்பகத் தன்மை, கருத்துக் கணிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மக்களின் எண்ணிக்கை மற்றும் கருத்துக்கணிப்பீடு எடுத்த நாள் ஆகிய மூன்று காரணங்களுக்கும் ஏற்ப திருத்தம் செய்து தனது கருத்துக் கணிப்பாக வெளியிடுகிறது.

CBCயின் ஓகஸ்ட் 7ஆம் திகதியின் கருத்துக் கணிப்பின்படி அமெரிக்க மக்களில் வாக்களிக்கத் தகுதியுடையவர் களில் 46.8% ஆனவர்கள் Hillary Clinton ஐ ஆதரிக்கிறார்கள்
40.4% ஆனவர்கள் Donald Trump ஐ ஆதரிக்கிறார்கள்
12.8% ஆனவர்கள் ஏனையகட்சி வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள்.

இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் மக்களின் வாக்குகள் (Popular vote) அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்வது இல்லை. அவ்வாக்குகள் மூலம் மக்கள் நொவம்பர், 08இல் 538 தெரிவாளர்களையே தெரிவு செய்கிறார்கள். (www.vlabaram.com இல் March 15, 2016 விளம்பரம் இதழைப் பார்க்கவும்) இந்த 538 தெரிவாளர்களும் ஜனவரி 20, 2017 இல் வாக்களிப்பதன் மூலமே அமெரிக்க ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவர்.

இதனால் செய்தி ஊடகங்கள் மக்களின் வாக்களிப்பு வீதம் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு அதிகம் என்று கூறினாலும் அவை அந்த வாக்களிப்பு வீதத்தை மாநில வாரியாக ஆராய்ந்து பிரதான இரண்டு கட்சி வேட்பாளர்களுக்கும் சார்ப்பாக எவ்வளவு தெரிவாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கின்றன.



இரண்டு மாநிலங்கள் (Maine and Nebraska) தவிர ஏனையவற்றில் அந்த மாநிலங்களில் வென்ற ஜனாதிபதி வேட்பாளருக்கே முழுத்தெரிவாளர்களும் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படும். மேற்கூறிய இரண்டு மாநிலங்களில் மட்டுமே தொகுதிவாரியாக வென்றவருக்கு ஒரு தெரிவாளர் வீதம் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படும்.

CBC செய்தி நிறுவனத்தின் கணிப்பின்படி மேலே கூறப்பட்டுள்ள ஓகஸ்ட் 7ஆம் திகதியின் அமெரிக்க மக்களின் வாக்களிப்பு வீதம் இரண்டு பிரதான கட்சி வேட்பாளர்களுக்கும் எவ்வளவு தெரிவாளர்களைக் கொண்டுவரும் எனத் தெரிவித்துள்ளார்கள் எனப் பார்ப்போம்.

ஜனநாயகக்கட்சியின் Hillary Clinton - 347 தெரிவாளர்கள்.
குடியரசுக்கட்சியின் Donald Trump - 191 தெரிவாளர்கள்.
மொத்தமாக தெரிவுசெய்யப்படும் 538 தெரிவாளர்களில் குறைந்தது 270 தெரிவாளர்களின் ஆதரவைப் பெறுபவரே ஜனவரி 20, 2017 இல் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவர். நாடு தழுவிய மக்களின் வாக்களிப்பில் 6.4% அதிகப்படியான வாக்குகளை மட்டுமே Hillary Clinton பெற்றாலும் தெரிவாளர்களின் தெரிவில் 64% ஆதரவை பெற்று (அதாவது 28% மேலதிக தெரிவாளர்களின் ஆதரவைப் பெற்று) இலகுவாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என CBC செய்தி நிறுவனத்தின் ஓகஸ்ட் 7ஆம் திகதி வெளியான கருத்துக்கணிப்பு கூறுகிறது.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative



Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.




- ஆதித்தன் -

# விஷ ஊசி சந்தேகத்திற்கு எவ்வாறு தீர்வு காண்பது?

முன்னாள் போராளிகளுக்குத் தடுப்பு முகாமில் வைத்து விஷ ஊசி ஏற்றப்பட்டதான விடயம் தாயகத்தில் இப்போது பரபரப்பாக பேசப்படுகின்ற ஒன்றாக இடம் பெற்றுள்ளது. அரசியல் மட்டத்திலும் சமூக மட்டத்திலும் இன்று அதிகமாக இவ்விடயம் கவனயீர்ப்பைப் பெற்றுள்ளது. போர்க் குற்றங்கள் தொடர்பிலான விசாரணை பொறிமுறை சர்வதேச இணைப்புடனானதா உள்நாட்டினது மட்டுமா என்கிற விவாதம் நடைபெற்று வரும் நிலையில் விஷ ஊசி விடயமும் இதில் சேர்ந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினி புற்று நோயினால் மரணித்த பின்னர் அவருக்குப் புற்றுநோய் ஏற்பட காரணம் அவர் தடுப்பு முகாமில் இருந்த போது அவருக்கு சந்தேகத்திற்கிடமான ஊசி ஏற்றப்பட்டதே எனப் பரவலாகப் பேசப்பட்டது. பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு என்கின்ற தடுப்பு முகாமில் இருந்து விடுதலையான 104 வரையிலான முன்னாள் போராளிகள் நோய் காரணமாக மரணமடைந்துள்ளதாகவும், இவர்கள் தடுப்பிலிருந்தபோது சந்தேகத்திற்கிடமான ஊசிகள் ஏற்றப்பட்டதாலேயே இம்மரணங்கள் நிகழ்ந்திருப்பதான சந்தேகம் நிலவுவதாகவும், அது குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இதே வேளையில், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க செயலணியின் கருத்தறியும் அமர்வு ஒன்றில் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் நேரடி வாக்குமூலமாக இதனை தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட எஸ்.என்.தேவன் என்ற முன்னாள் போராளி ஒருவரே இவ்வாறு



சாட்சியமளித்துள்ளார். போர்க்குற்ற விசாரணைப்பொறிமுறை குறித்து பொதுமக்களது கருத்துக்களை அறிவதற்காக அமைக்கப்பட்டுள்ள செயலணியின் அமர்வு வன்னியில் நடைபெற்றபோது, அங்கு முன்னிலையாகி கருத்து வெளியிட்ட குறித்த முன்னாள் போராளி, இராணுவத்தினர் மீது இந்தப் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். தனக்கு ஊசி ஏற்றப்பட்டதாகவும், அவயவங்களைச் செயலிழக்கச் செய்யும் இரசாயனம் கலந்த உணவு வழங்கப்பட்டதாகத் தான் நம்புவதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். விடுவிக்கப்பட்டதன் பின்னர் தன் உடல்நிலை படிப்படியாகப் பாதிப்படைந்து வருவதாகவும் தன்னால் எந்தவொரு வேலையையும் செய்ய முடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழ் அரசியல்வாதிகள் இது குறித்து தெரிவித்துள்ள கருத்துக்களை விடவும் இந்த முன்னாள் போராளியின் வாக்குமூலம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த ராஜபக்ஸ அரசாங்கத்தின் போது, காணாமல் போனவர்கள் குறித்து விசாரணை அமர்வுகளை மேற்கொண்டு வந்த பரணகம ஆணைக்குழுவின் முன்பாக கருத்துக்களைக் கூறியதை விடவும், தற்போதைய கருத்தறியும் அமர்வுகளில் துணிச்சலாக மக்கள் தங்களது கருத்துக்களை முன்வைத்து வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில், தற்போதைய செயலணியின் கருத்தறியும் அமர்வுகளில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் முதலானோர் நேரில் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இதன்போதே புனர்வாழ்வு முகாமில் வைத்து விஷ ஊசிகள் ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து முன்னாள் போராளி ஒருவர் முக்கியமான தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து இப்போது அரசாங்கத் தரப்பிலிருந்தும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இக்குற்றச்சாட்டு பொய்யானது என்று அரசாங்கத் தரப்பில் இருந்தும் இராணுவத்தரப்பிலிருந்தும் மறுப்புக்கள் தெரிவிக்கப்படுகின்றன. முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி போட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம், மிருகத்திற்குக் கூட இவ்வாறு நாம் விஷம் கொடுத்ததில்லை என்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர.

தங்கள் நாட்டு பௌத்த இராணுவம் இவ்வாறு முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடாது எனவும் இராணுவத் தரப்பினர் கூறுகின்றனர். இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த போராளிகளை சித்திரவதை செய்து படுகொலை செய்ததும், இசைப்பிரியா உள்ளிட்ட பல பெண் போராளிகளை பாலியல் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொன்று குவித்ததும் எந்த நாட்டு இராணுவம் என்பதற்கு அவர்கள்தான் பதில் கூற வேண்டும். இதேவேளை, புனர்வாழ்வு முகாம்களில் இவ்வாறு நடைபெற்றிருப்பதாக சந்தேகம் இருப்பின் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளத் தயார் என சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். ஆனால், இந்தப் பரிசோதனைகளை சர்வதேச மருத்துவர்கள் மேற்கொள்ள வேண்டும் என முன்வைக்கப்படும் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை அவர் நிராகரிக்கின்றார். தரமான உள்நாட்டு மருத்துவர்கள் மூலம் இந்த மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என அவர் கூறுகின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் போராளிகளுக்கு மருத்துவ பரிசோதனை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறுகின்றது. ஆனால், புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் அனைவருக்கும் இவ்வாறு பரிசோதனைகளை மேற்கொள்வது தங்களால் இயலாத காரியம் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

போர்க்குற்றத்தை விசாரிக்க சர்வதேச தலையீட்டை மறுக்கும் இலங்கை அரசாங்கம் இந்த மருத்துவ பரிசோதனைக்கும் சர்வதேச மருத்துவர்களின் சேவையை நிச்சம் மறுக்கவே செய்யும். அதில் மாற்றமில்லை.

போர் முடிவுற்று ஏழு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும், முன்னாள் போராளிகள் தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு சில வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் தற்போது எழுந்துள்ள விஷ ஊசிப் பிரச்சினை பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது. தடுப்பிலிருந்து வெளிவந்துள்ள முன்னாள் போராளிகளுக்கு உடல்நிலையில் பாதிப்புக்கள் ஏற்படுகின்ற போதும், அவர்களுக்கு ஏதேனும் நோய்கள் தாக்குகின்ற போதும் தங்களுக்குத் தரப்பட்ட உணவில் விஷம் வைக்கப் பட்டிருக்குமோ? அதனால்தான் நோய்கள் ஏற்படுகின்றதோ? என்று உளவியல் ரீதியான குழப்ப நிலையை அடைகின்றனர். இவ்வாறு குழப்பமடையும் போராளிகளின் சந்தேகங்களை தற்போது கேட்க முடிகின்றது.

சரணடைந்த போராளிகள் சிலர் மருத்துவ சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த போது சில மருத்துவ பரிசோதனைகளைக் கூட அவர்களின் உடல்களில் மேற்கொள்ளப்பட்டதாகப் பெண் போராளி ஒருவர் தெரிவிக்கின்றார். தான் வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது ஒரு போராளியின் உடலில் அவ்வாறு பரிசோதனை முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டதை தான் கண்டதாகவும் அவர் கூறுகின்றார். இவ்வாறு, சந்தேகத்திற்கிடமான சில விடயங்கள் நடந்திருக்கக் கூடிய நிலைமை இருந்ததை அரசாங்கம் முற்றாக மறுக்க முடியாது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வினைக் காண வேண்டியது இப்போது அவசியமாகின்றது. இதனை முதலில் தமிழ் சமூகமே முன்னெடுக்க வேண்டும். தமிழ் மருத்துவர்களின் பங்களிப்பு இதில் முக்கியமானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த பிரச்சினையை முன்னிறுத்தி புலம்பெயர் நாடுகளிலும் தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. லண்டனில் நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. எனவே, புலம்பெயர் அமைப்புக்களும் இதற்கான உதவிகளை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

விளம்பரம்™
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# MATH WORLD

**MOST ADVANCED TALENTED HELP**
**- A private math institute -**

***"Teaching Experience in Math for more than 23 years"***

# Gr.11 & Gr.12 Students, score 90's & above

**in the 2016-2017 school year**

## Guaranteed Marks based on our previous records

***"Our Target is 90% and above"***

- *An effective study plan and targeted practice sessions delivers stunning results*
- *Entire Ontario Math Curriculum for relevant grade will be covered*
- *Appropriate additional content included for knowldege enhancement*
- *Focus on concepts comprehension and problems solving methodologies*
- *Knowledge application, thinking and inquiry development for word problem solutions*
- *No more cramming the night before a test and hoping for the best, we will help you prepare the best and keep you on top of the rest of your class*
- *23+ years of time tested, success proven coaching approach is only a phone call away*

## Our Program for school year 2016-17

| Grade | Program | Description |
|---|---|---|
| Grade 7: | new G7-500 | A genius math program designed for students currently in Gr-7. This program will allow students to apply for the IB, Enriched or TOPS math program in high school (or any other specialized math program) |
| Grade 8: | G8-400 | The most intelligent engineering math program prepared from Gr 8. The first batch, G8-400, started in May 2015 and has shown outstanding progress. |
| Grade 9: | G9-300 | Teaching & learning at Gr. 10 level |
| Grade 10: ★ | G10-200 | Prepare them for Gr.11 while scoring high in Gr. 10 |
| Grade 11: ★ | G11-100 | Gr. 12 foundation to be built while scoring high in Gr. 11 |
| Grade 12: | G12-ADCL | The best program for learning in advance. A complete course to achevie 90's & higher. |

★ In order to achieve the highest marks possible in Gr. 12, a good foundation is needed in Gr. 10 & 11

# Class starts from second week of August

***"Limited Space"*** **Meeting must be held before the class starts, Call to make an appointment**

**@ 416 666 5515** | *61 SNOWY OWL WAY SCARBOROUGH ON Markham/McNicoll*

# விஷ ஊசி...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

நல்க முடியும் ஆயிரக்கணக்கான முன்னாள் போராளி



களுக்கும் பரிசோதனை செய்வதை விட, தங்களுக்கு ஊசி ஏற்றப்பட்டதாகக் கூறுகின்றவர்களுக்கும், தங்களுக்கு உடல்நிலை பாதிப்படைந்து வருவதாகக் குறிப்பிடும் போராளிகளுக்கும் உடனடியாக மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளலாம். இவ்வாறு, சுமார் நூறு வரையான முன்னாள் போராளிகளுக்காவது மேற்கொள்வதென்பது சிரமமான காரியமல்ல. இவ்வாறு பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் ஒரு சிலருக்காவது உடலில் விஷம் கலந்திருப்பதாகவோ, அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவோ கண்டறிப்பட்டால் அனைத்து முன்னாள் போராளிகளுக்கும் மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கலாம். சர்வதேச மருத்துவர்களின் அவசியத்தையும் வலியுறுத்தலாம். இதுவே இப்போது உடனடியாக மேற்கொள்ளக் கூடியதும், சாத்தியமானதுமான நடவடிக்கை.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# அதிர்ச்சி...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தப்புவதற்கு வாய்ப்பு உள்ளதென்பதற்கும் குமாரபுரம் படுகொலை வழக்கு ஓர் உதாரணமாக அமைந்துள்ளது. இதேவேளை, 2009ம் ஆண்டு இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கும் குமாரபுரம் வழக்கு ஒரு பாடமாக அமைகின்றது. சர்வதேச விசாரணையை பாதிக்கப் பட்ட மக்கள் கோருகின்றமை நியாய மானது என்கின்ற கருத்தையும் இந்த வழக்கின் தீர்ப்பு வெளிப்படுத்துகின்றது.

இப்போது குமாரபுரம் மக்கள் குறித்த வழக்கினை மீள்விசாரணைக்குட்படுத்த ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த வழக்கை மேன்முறையீடு செய்ய ஜனாதிபதி சட்ட மா அதிபருக்கு பணிப்புரை விடுப்பாரா என்பது குறித்து அவரிடமிருந்து இப்பத்தி எழுதும் வரை எதுவித பதிலும் வழங்கப்படவில்லை. எனினும், நல்லிணக்கம், நல்லாட்சி என்ற வார்த்தைகளுக்கு மதிப்பளித்து பாதிக்கப்



பட்ட மக்களின் கருத்துக்களை ஜனாதிபதி கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.


Second Career

*Planning for a New Career or Upgrading Your Skills?*

Find Out:

- Which program best suits your skills?
- What government funding is available for you?
- Which careers have the best job opportunities?



- EENC is an award-winning service network that is connected to 100's of Training Institutions and Employers.
- We are NOT a Training Institution.
- Our services are free and you are under no obligation.

*Join 100's Who Say They're Glad That They Called Us First*

EENC.ca Employment and Education Network Canada Inc.



Nira (Mon to Fri 9AM to 5 PM)
(416)-224-5020 Ext: 201

தமிழில் விபரங்களிற்கு:
(416)-224-5020 Ext 205

Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

BUSINESS / LAW CAREERS

Accounting ♦Payroll Admin ♦Business Administration ♦ERP Information System Analysis ♦Banking and Financial Services ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Supply Chain & Logistics ♦Business Management ♦Business Analysis, Projects & Service Management ♦PMP ...

IT CAREERS

Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦Network Security Specialist ♦Web & Mobile Developer ♦CISCO ♦LINUX ♦Software Quality Assurance and Testing ♦ITIL ♦Datawarehousing & Business Intelligence ...

HEALTHCARE & Related

Medical Office Administration ♦Diagnostic Cardiovascular Sonography♦ ECG/Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker(PSW) ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant(ECA) ♦Medical Laboratory Technician ♦Physiotherapist Assistant and Occupational Therapist Assistant♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...

TRADES

HVAC Technician ♦Gas Technician-G3/G2 ♦Home Inspection ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechinacial / Engineering ♦Welding / Solar Energy Technician ...

ENGINEERING / DESIGN

Civil Engineering Design and Technology ♦CNC and MasterCAM Technology ♦Mechanical Engineering Design and Technology ♦Structural Engineering Design and Technology♦Electrical and Electronics Engineering Design & Technology ...

PHARMACEUTICAL

Pharmaceutical Manufacturing ♦Pharmaceutical Quality Control ♦Regulatory Affairs ♦Research & Development ♦Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology ♦Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research ...

# மாறாத, மாறுகின்ற அல்லது இரண்டும் சேர்ந்த அடமானக்கடனா சிறந்தது?

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் 469

ஏறக்குறைய 900 ஆண்டுகள் கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்பு தெரியபடுத்திய விடயம், ஒரு விடயத்தை செய்யும்போது, பலதுபட்டு செய்வதே சிறந்தது.

ஆனால் ஏறக்குறைய 3000 வருடங்களுக்கு பிற்பாடு, அதாவது இன்றும் கூட, மக்கள் அதனை தொடர்வதாகத் தெரியவில்லை. இது பொதுவாக மனித வாழ்வில் சகல விடயங்களிற்கும் பொருந்தலாம். ஆங்கில த்தில் இதனை இலகுவாக ஒரு வசனத்தில் குறிப்பிடலாம். 'Don't put all the eggs in one basket' இது இன்றைய பொழுது, அடமானக்கடனிற்கும் இலகுவாக பொருந்தலாம்.

இன்று 96% அடமானக்கடன் பெறுபவர்கள் ஒரேவிதமான கடனையே பெறுகின்றார்கள். மாறாத அடமானக்கடன் வட்டிவீதம் (Closed mortgage) அல்லது மாறுகின்ற அடமானக்கடன் (Variable mortgage). ஆனால் என்னுடைய அனுபவத்தில். இரண்டும் சேர்ந்த கடன் பெறும்முறை. அதாவது 'Hybrid mortgage' சிறந்தது. 4% மக்களே இவ்வாறான அடமானக் கடனைப் பெறுகின்றார்கள் என்பது ஆச்சரியமான உண்மை.

பொருளாதார ஆய்வாளர்களின் அறிவுறுத் தலில் 50/50. அதாவது பெறும் கடன் தொகைகளில் 50%ஐ மாறாதா வட்டி வீதத்திலும் மிகுதி 50% கடனை மாறுகின்ற வட்டி வீதக்கணக்கிலும் பெறுவது சிறந்ததா கலாம். கடனைத்திருப்பிக் கொடுக்கும் காலஅளவை (Term), இரு மோட்கேஜ்களி னதும், ஒரே அளவாக எடுப்பது நல்லதே என அவர்கள் அறிவுறுத்துகின்றார்கள்.

உதாரணமாக ஒன்றின் அடமானக்கடன் காலம் 5 வருடங்களாக இருப்பின், மற்ற தும் 5 வருடங்களாக இருப்பதே சிறந்தது.

| Year | Fixed mortgage | Variable mortgage | Hybrid mortgage |
|---|---|---|---|
| 2006 | 62% | 23% | 15% |
| 2007 | 72 | 21 | 7% |
| 2008 | 52 | 40 | 8% |
| 2009 | 68 | 27 | 5% |
| 2010 | 64 | 31 | 5% |
| 2011 | 56 | 37 | 7% |
| 2012 | 71 | 20 | 9% |
| 2013 | 72 | 18 | 10% |
| 2014 | 76 | 20 | 4% |
| 2015 | 76 | 20 | 4% |

இவ்வகையான அடமானக்கடன் பெறுவதில் சிறப்பு என்னவெனில், எதிர்பாராத விதமாக அடமானக் கடன் வட்டி வீதத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டால், மாறுகின்ற வட்டி வீதத்திலும் அதிகரிப்பு ஏற்படும். ஆனால் மாறாத வட்டி வீதக்கடனின் வட்டிவீதம் மாறாமல் இருக்கும். இதனால் 50% ஆன கடனின் வட்டியை சேமிக்கலாம்.

**அடமானக்கடன் பெறுபவர்களின் முறை**

கனடாவின் ஆதனச்சந்தையின் நிலவரம் எதிர்வு கூறமுடியாத நிலைமையைக் காட்டுகின்றது. குறிப்பாக வன்கூவர், ரொறொன்ரோ போன்ற முன்னணி நகரங்களை விட மற்றைய நகரங்களின் விலையில் இறக்கத்தை காணக்கூடியதாக உள்ளது. எது எப்படியாயினும் இதுவரை கனேடியப் பொருளாதாரத்திற்கு ஊன்று கோலாக இருந்து வருவது ஆதன வியாபாரமே.

வன்கூவர் பெரும்பாகத்தில் கடந்த யூலை (2015) இற்கும் இந்த வருடத்திற்கு இடையே 32% விலை அதிகரிப்பை காணக் கூடியதாக உள்ளது. ஆனால் விற்கப்படும் ஆதனத்தின் அளவில் 19% இறக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை கடந்த 4 மாதங்களாக தொடர்வதனைக் காணலாம். அத்துடன் ஓகஸ்ட் 02, 2016 இலிருந்து மேலதிக நிலமாற்றுவரியும் வன்கூவரில் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் தாக்கம் எதிர்காலத்தில் தெரிய வரும்.

ஏற்கனவே புதிய வரிகளின் தாக்கத்தை ஆதன வியாபாரத்தில் காணக்கூடியதாக வன்கூவர் வீட்டு முகவர்கள் தெரியப்படுத்து கிறார்கள்.

மேலும் ரொறொன்ரோ இலும் ஆதன வியாபாரத்தில் 6.5% ஆதன வியாபார இறக்கம் ஏற்பட்டுள்ளதனை காணலாம்.

ஏற்கனவே அல்பேட்ட மாகாணத்தில் எட்மன்ரன், கல்ஹறியில் ஆதன வியாபாரம் மிகவும் நலிந்த நிலையில் காணப்படு கின்றது. 2-3 வருடங்களிற்கு முன்பு இவ்வாறான நிலைமை ஏற்படும் என்று ஒருவர் கூட கனவில் நினைத்திருக்க மாட்டார்கள். இவ்வாறான நிலைமை ரொறொன்ரோ வன்கூவரில் ஏற்படாது எனக் கூறமுடியுமா?

நிலைமைகள் இவ்வாறு இருக்கும் போதும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...

JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories
- Window Assemblers
- Forklift Operators & Warehouse Workers
- CNC Machine set-up/Operators
- Packagers & Assembly Line Workers
- Welders MIG & TIG

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN CARD & PHOTO ID
AND TALK TO OUR SRI LANKAN REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

ABLE PLUS PERSONNEL INC
2300 Finch Ave. West, Unit #46
Toronto, ON M9M 2Y3
(416) 742-7474

ABLE PLUS PERSONNEL INC.

# ஓதி வருவதில்லை ஒழுக்கம்

எந்த ஒரு செயலும் தன்மேல் திணிக்கப்படாமல் மிக இயல்பாக தனக்கு ஒழுக்கத்தை வரவைத்த அனுபவத்தையும், ஈஷாவில் அப்படிப்பட்ட ஒழுக்கம் எப்படி கடைப்பிடிக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் இங்கே நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் சத்குரு...

சத்குரு: நான் பள்ளி சென்ற காலத்தில் கூட ஒழுக்கம், நன்னடத்தை என்று எதையும் என் மீது என் வீட்டார் திணிக்க முயன்றதில்லை. ஆனால், எங்கள் வீட்டில் சில பண்பாடுகள் இருந்தன. ஒழுக்கத்தை நிலைநாட்டக் கோபம் கொண்டு கத்துவதால், எதுவும் சரியாவதில்லை. எங்கே நாங்கள் போனாலும், இரவு உணவுக்கு எல்லோரும் கூடி ஒன்றாகச் சாப்பிட வேண்டும் என்பது ஒரு பழக்கமாக இருந்தது. ஒருவர் வராவிட்டாலும் அவருக்காக மொத்தக் குடும்பமுமே காத்திருக்கும். அதனால் மற்றவர்கள் பசியுடன் காத்திருப்பார்கள் என்ற எண்ணமே வீட்டில் நேரத்துக்குக் கொண்டு சேர்த்துவிடும். இது எங்கள் மீது ஒரு நிபந்தனையாகத் திணிக்கப்பட்டதல்ல. அன்பினாலும், பொறுப்பினாலும் அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருந்தது. காலையும், மாலையும் தினமும் இருவேளை வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேலைக்கு ஒரு பெண் அமர்த்தப்பட்டு இருந்தாள். தினமும் ஒருமுறை ஈரத் துணிகொண்டு தரையைத் துடைக்கும் பழக்கமும் இருந்தது. என்றைக்காவது, என் அம்மாவே துடைப்பத்தை எடுத்துப் பெருக்க ஆரம்பிப்பாள். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு எப்படிச் சும்மா இருக்க முடியும்? சொல்லப்படாமலேயே நாங்களும் அந்த வேலைகளைப் பங்கு போட்டுக் கொள்வோம்.

சில வீடுகளில் பயன்படுத்தப்பட்ட துணிகள் அங்கங்கே குவியலாக இருப்பதைக் காணலாம். எங்கள் வீட்டில், உடுத்திக் களைந்த உடைகள் குவியல் குவியலாகக் கண்ட இடங்களில் வீசப்பட்டு இருக்காது. கீழே கிடக்கும் குப்பையைக் குனிந்து பொறுக்க உங்களுக்கு எண்ணம் இல்லை என்றால் நானே எடுத்துப் போடுகிறேன். ஆனால் அதை அதனதன் இடத்தில் வைக்க வேண்டும் என்று எதுவுமே ஒரு நிபந்தனையாக எங்கள் மீது திணிக்கப்படவில்லை. ஏன் ஒழுங்காகச் செய்யவில்லை என்று யாரும் கத்த மாட்டார்கள். யாரிடமும் சண்டை போட மாட்டார்கள். நாங்கள் செய்யத் தவறியதை எங்கள் அம்மா எடுத்து ஒழுங்குபடுத்துவாள். அதற்கு வாய்ப்புக் கொடுக்க மனம் வராமல், நாங்களே ஓர் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தோம். வார்த்தைகளால் ஒழுக்கத்தைப் போதித்து மற்றவரிடம் கீழ்ப்படிதலை எதிர்பார்ப்பதைவிட இதைப் போன்ற சிறு சிறு விஷயங்கள் ஒரு வீட்டின் பண்பாடாகவே விளங்குகையில் அவை வாழ்க்கையில் பெரும் மதிப்புக் கொண்டவையாக மாறுகின்றன. அவற்றை மீற மனம் வருவதில்லை. இந்த அளவுகூட ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் வாழ்க்கை அதன் போக்கில் தறி-கெட்டு நடக்கும். ஒழுக்கத்தை நிலைநாட்டக் கோபம் கொண்டு கத்துவதால் எதுவும் சரியாவதில்லை. ஓர் இளம் தம்பதி. கணவனுக்கும் மனைவிக்கும் கருத்து வேறுபாடு வந்து அது சண்டையாக வெடிக்கும்போதெல்லாம் வேலை செய்யும்



பெண்ணுக்குப் புரியக்கூடாது என்று ஆங்கிலத்தில் கத்திக் கொள்வார்கள். ஒருநாள் மனைவிக்கு ஒரு சந்தேகம் வந்தது. வேலைக்காரியை அழைத்தாள். "உனக்கு ஆங்கிலம் புரியாதுதானே?" என்று கேட்டாள். "புரியாது. ஆனால், நீங்கள் இருவரும் சண்டையிட்டுக் கொள்ளும்போது யார் பக்கம் தப்பு என்று புரிந்துவிடும்" என்றாள் வேலை செய்பவள். "எப்படி?" "யாருக்கு முதலில் கோபம் வருகிறது என்று கவனித்தால் போதுமே.." என்றாள் அவள்.

யாரையாவது வற்புறுத்திக் கற்றுக்கொள்ளச் சொன்னால் அதை எப்படித் தட்டிக் கழிப்பது என்றுதான் யோசிப்பார்கள். திணிப்பவர்கள் மூலமாகவோ, புத்தகங்கள் மூலமாகவோ, உபதேசங்கள் செய்பவர்கள் மூலமாகவோ, தத்துவங்களைப் போதிக்கும் ஆசான்கள் மூலமோ அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நாகரிகம் இறங்குவதில்லை. சமையலறையிலிருந்து கழிப்பறை வரை எல்லாவற்றையும் சுத்தமாக வைத்திருப்பது ஓர் இயல்பாக இருக்க வேண்டுமென்றால் அது அந்தக் குடும்பத்திலேயே ஊறி இருக்க வேண்டும். அப்போதுதான் அது அதன் வாரிசுகளிடம் பிரதிபலிக்கும். என் அம்மாவிடம் நான் கண்ட பழக்கம் என்னிடமும் தொடர்கிறது. என் மகள் பயன்படுத்திய துணியை அங்கங்கே சிதறடித்திருந்தால் எதுவும் சொல்லாமல் அவற்றை எடுத்து ஒழுங்குபடுத்த ஆரம்பிப்பேன். உடனடியாக அவள் ஓடி வருவாள். அந்த வேலையை என்னை முந்திக் கொண்டு செய்து முடிப்பாள்.

இன்று ஈஷாவிலும் யார் மீதும் எந்த நன்னடத்தை விதிகளையும் திணிப்பதில்லை. வாழ்க்கையின் தரம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறேனோ அதை முதலில் நான் கடைப்பிடிக்கிறேன். அந்தத் தரம் கிடைப்பதற்குச் சுத்தமான ஒரு சூழ்நிலை வேண்டும். கீழே கிடக்கும் குப்பையைக் குனிந்து பொறுக்க உங்களுக்கு எண்ணம் இல்லை என்றால் நானே எடுத்துப் போடுகிறேன். அழுக்கான, அசுத்தமான இடத்தில் தங்க எனக்கு விருப்பம் இல்லை என்கிறேன். அவ்வளவுதான். 'அதை அப்படிச் செய், இதை இப்படிச் செய்யாதே' என்று மறுபடி மறுபடி சொல்லிக் கொண்டே இருப்பதைவிட இதுவே சிறந்த வழியாக எனக்குத் தோன்றுகிறது.

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் இந்த நிலைப்பாட்டைக் கொண்டு வந்தாலொழிய வாழ்க்கையின் தரம் உயர வாய்ப்பில்லை. சும்மா



## சத்குரு வாசுதேவ்

சாப்பிடுவதும், தூங்குவதும், பணம் பண்ணுவதும் உங்கள் வாழ்க்கையின் தரத்தை உயர்த்தாது. எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். யார் மீதும் எதையும் திணிக்காமல் எது, எப்படி, எங்கே வேலை செய்யும் என்பதை அவர்களுக்குப் புரியவைத்தால் போதும். விவேக புத்தியுள்ள எவரும் சந்தோஷமாக அதைச் செய்யத் தயாராக இருப்பார்கள். யாரோ ஒன்றிரண்டு பேர் முரண்டு பிடிக்கலாம். எதற்கும் சரிவராமல், கழுதையாகத்தான் நடந்து கொள்வேன் என்றால் முரட்டுக் கழுதைகளைக் கையாள்வதைப் போல பிரம்புடன்தான் அவர்களைக் கையாள வேண்டும். ஆனால் யாரையாவது வற்புறுத்திக் கற்றுக் கொள்ளச் சொன்னால், அதை எப்படித் தட்டிக் கழிப்பது என்றுதான் யோசிப்பார்கள். கட்டுப்படுத்த முனைவதில் உங்கள் உயிர் போகும். தட்டிக் கழிக்கப் பார்ப்பதில் அவர் உயிர் போகும். இருவருக்கும் நிம்மதி இருக்காது. எனக்கு 11 வயதானபோது, யோகா என் வாழ்க்கையில் ஓர் அங்கமானது. என் வாழ்க்கையில் சில ஒழுங்குமுறைகள் தாமாகவே வந்தன. சில விஷயங்களை மிகக் கச்சிதமாகச் செய்து முடித்தால்தான் அவற்றுக்கான பலன் கிடைக்கும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

இல்லாதுபோனால், யோகா வேலை செய்யாது. அதற்கான ஆர்வமும், அவசியமும் தாமாக எழுந்தன. ஒரு செயலைக் கச்சிதமாகச் செய்து முடித்தால், அங்கே ஒழுங்கீனத்துக்கே இடமில்லை. குழந்தையாக இருக்கும்போதே யோகா வாழ்க்கையின் ஓர் அம்சமாக மாறிவிட்டால், யாரும் எதையும் திணிக்காமல், எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல், அவர்கள் தாமாகவே ஒழுக்கமாகத்தான் இருப்பார்கள்.







# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 09

இந்தப் பதிவின் நோக்கம் மாற்று மருந்துகளைக் குறை சொல்வது நோக்கமல்ல. மாற்று மருந்துகளின் பக்க விளைவுகள் என்று சொல்லப்படும் கொடும்விளைவுகளில் இருந்து அப்பாவி மக்களை காப் பாற்றுவதே நோக்கம். இதை ஒரு மாற்று மருத்துவரே சொல்லி இருக்கும் விடயங்கள் என்றால் உங்களுக்கும் தெளிவாகும். திரு. பஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதிய புத்தகத்தின் பக்கங்களை கீழே கொடுத்துள்ளோம்.

சர்க்கரை நோயை இன்சுலின் ஊசி மருந்து மட்டுமல்ல, எந்த மாற்று மருந்தும் குணப் படுத்தாது என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

இன்சுலின் ஊசி நீரிழிவு நோயைக் குணப்படுத்தாது!

இந்திய மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் 1940 இல் இயற்றப்பட்டு பின் 1995 இல் திருத்தியமைக்கப்பட்டது. இந்தச் சட்டத்தில் ஷெட்யூல் - J (Schedule - J ) என்ற பிரிவில் ஆங்கில மருத்துவத்தால் குணப்படுத்த முடியாது என்று 51 நோய்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த 51 நோய் களில் எந்த ஒரு நோயையும் தங்கள் மருந்துகளால் குணப்படுத்தவோ, கட்டுப்படுத் தவோ முடியும் என்றோ அல்லது தங்கள் மருந்துகளால் குணப்படுத்தி இருக்கிறோம் என்றோ அல்லது தங்கள் மருந்துகளைக் கொண்டு குணப்படுத்தி இருக்கிறோம் அல்லது கட்டுப்படுத்தி இருக்கிறோம் என்றோ ஆங்கில மருத்துவம் கூறுவது குற்ற மாகும் என்று எச்சரிக்கிறது இந்தச் சட்டம்.



இந்தச் சட்டத்தின்படி ஷெட்யூல் - J இல் குறிப்பிடப்பட்டுள்ள 51 நோய்களும், ஆங்கில மருத்துவத்துக்கு மட்டுமே உரித்தான நோய்கள். ஒவ்வொரு நோய்க்கும் இன்று வரை நோயாளிக்கு கொடுத்துக் கொண்டிருக் கிறது. ஆங்கில மருத்துவம், நோய்களைக் கட்டுப்படுத்தும் மருத்துவம் என்றும், மக்கள் நம்புகின்றனர். மருந்துகளும் பெரும்பாலான பலவிதமான நோய்களுக்காக விற்பனையாகி க் கொண்டிருக்கின்றன.

ஆங்கில மருத்துவத்தில் குணப்படுத்த முடியாத, கட்டுப்படுத்தவும் முடியாத நோய் களில் ஒன்றான நீரிழிவு நோயை ஆங்கில மருத்துவத்தால் ஏன் குணப்படுத்த முடியாது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதும் முடியாது என்பதை பார்ப்போம். நீரிழிவு நோயைக் குணப்படுத்த முடியாத ஒரு மருத்துவம் எவ்விதம் தன்னை நீரிழிவு specialist என்று விளம்பர படுத்திக்க கொள்ள முடிந்தது என்பது, இந்த அத்தியாயத்தின் முடிவில் உங்களை நிச்சயமாக சிந்திக்க வைக்கும்.

ஒன்று, 1940 மருந்துகள் சட்டப்படி ஷெட்யூல் - J அட்டவணை நீக்கப் படவேண்டும், அல்லது ஆங்கில மருத்துவம், சட்டத்திற்கு தலை வணங்கி நோயாளிகளிடமிருந்து ஒதுங்கிட வேண்டும்.

நாம் எந்த உணவை (தண்ணீர் கூட) உட்கொண்டாலும் அது, ஜீரண உறுப்பு களால் முறையாக ஜீரணிக்கப் படுகிறது. முறையான ஜீரணம் என்றால் என்ன?

ஒருவர் உணவு வேளையின்போது, "தனக்கு வேண்டாம், பசியில்லை" என்று கூறுகிறார். ஆனால் உணவு பரிமாறப்படும் போது, தனக்குப் பிடித்தமான உணவுப் பொருள்கள் இருப்பின், ஒரு பிடி, பிடிக்க உட்கார்ந்து விடுகிறார். இது உண்மையான பசி இல்லை. ருசிக்காக ஆசைப்பட்டு உண்ணும் உணவு முறையாக ஜீரணிக்கப்பட மாட்டாது. உண்மையிலேயே பிடிக்கும் ஒருவர் இது வேண்டும் அது வேண்டும் இது ஏன் செய்ய வில்லை, இதில் உப்பு இல்லை, அதில் காரமில்லை என்று பரிமாறப்பட்ட உணவில் குறை சொல்லிக் கொண்டிருக்க மாட்டார். இருக்கும் உணவை நன்றி மரியாதையுடன் சாப்பிடுவார். ஆக முறை யான ஜீரணத்துக்கு முன்னோடியாக இருப்பது, "சாப்பிட ஏதேனும் கிடைக்காதா?" என்று எங்கள் கூடிய உண்மையான பசியாகும். ருசிக்காக சாப்பிடும் எந்த ஒரு சாப்பாடும் நீண்ட கால உடல் நலக்கேட்டிற்கு வழி வகுக்கும். உணவுப் பதார்த்தங்களில் ருசியின் தன்மை கூடக்கூட, ஜீரணத்தை திறன் குறைய ஆரம்பிக்கிறது. காரணம், எந்த உணவுப் பொருளும் வாயில் நன்றாக மென்று அரைக்கப்பட வேண்டும். அவ்வாறு அரைக்கப்படப் போதுமான அளவு உமிழ்நீர் சுரந்தாக வேண்டும்.

உமிழ் நீரானது, இருவகைகளில் சுரக்கிறது. ஒன்று, பசியின் காரணமாகச் சுரப்பது, இரண்டு ருசியின் காரணமாகச் சுரப்பது. பசியின் காரணமாக உமிழ் நீர் சுரக்கும் போது உணவின் தேவைக்குத் தகுந்த அளவிலும், பசியின்



**Premi. S**
Natural Medicine Practitioner ©
**647.278.3100**

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...

**NO MEDICAL INSURANCE**

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group · IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life

•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# ARISTO PEST CONTROL



Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca


# கீழ் முதுகுத் தண்டு வலி!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## Lower Back Pain

'உடலும் மனமும் ஒருகிணைந்தால் தான் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும். இதில் அளவு மீறிய உடல் உழைப்பு மற்றும் மன உளைச்சல் என்பனவற்றால் உடல் பாதிக்கப்படும் போது மனிதன் நோயாளியாக மாறுகிறான். உடல் உழைப்பும் உள்ளக செயல்பாடும் சீராக இருக்க வேண்டும்.



பழைய காலத்தில் உடல் உழைப்பு பிரதானமாக இருந்தது இன்று அப்படி இல்லை. அடுத்த தெருவுக்கு செல்வதென் றாலே வாகனத்தைப் பயன்படுத்தும் நிலைதான். நடை என்பதே பலருக்கு மறந்து போய்விட்டது. அன்று கஷ்டப்பட்டு செய்த வேலைகளை இன்று இயந்திரத்தின் செயல்முறையால் எளிதாகி விட்டது. குனிந்து நிமிர்ந்து வேலை செய்தவர்கள் இன்று இயந்திரமயமாக்கல் காரணமாக வீட்டு வேலைகளைக் கூட நின்று கொண்டே செய்கின்றனர். இதனால் மனிதர்களுக்கு உடல் உழைப்பு இல்லாது போய்விட்டது.

மேலும் பொருளாதார தேவைகளின் அதிகரிப்புக் காரணமாகப் பொருள்தேடும் இவர்களுக்கு இயல்பாகவே மன உளைச்சல், மன அழுத்தம் போன்ற நோய்களின் தாக்கம் ஏற்படுகிறது. இதனால் பெரும்பாலானோர் நீரிழிவு, இரத்த அழுத்தம், உயர் கொலஸ்ரோல், ஆஸ்துமா, ஆதரைடிஸ் போன்ற நோய்களின் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். அதுபோல இடுப்புவலி, கீழ் முதுகுத் தண்டுவலி, கழுத்துவ, தோள்பட்டைவலி, மூட்டு வலி எனப் பல வழிகளில் அவதிப்படுகின்றனர். ஆண், பெண் என்று இருபாலாரையும் பாதிக்கும் கீழ் முதுகுவலி (Lower Back Pain) வலி பற்றி இப்போது தெரிந்து கொள்ளலாம்.

### கீழ்முதுகுத் தண்டு வலிக்கான காரணங்கள்

நேரம் தவறி உணவு உண்பதாலும், இரவில் அதிக காரம், புளிப்பு நிறைந்த உணவை உண்பதாலும், வாயுவை அதிகரிக்கச் செய்யும் மாவுப் பண்டங்கள், கிழங்கு வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்வதாலும் அஜீரணம், மலச்சிக்கல் உண்டாகின்றது. இதனால் உடலில் புளிப்புத்தன்மை அதிகரித்து வாயு சீற்றம் கொண்டு மேல்நோக்கிச் சென்று தலைப் பகுதியை தாக்கி அங்கு நீர்கோர்த்து சூலை நீராக மாறுகிறது. பின் அந்த நீரானது கழுத்துப்பகுதிக்கு வந்து முதுகுத் தண்டு வழியாக வந்து இடுப்புப் பகுதியில் தங்கி விடுகிறது. இதனால் இடுப்புப் பகுதி இறுக்கமடையும். பின் இடுப்போடு சேர்ந்து கீழ் முதுகுத்தண்டிலும் வலி ஏற்பட ஆரம்பிக்கும். இதற்கு ஆங்கில மருத்துவ முறையில் எந்தத் தீர்வும் கிடையாது. இடுப்புப் பகுதியைச் சுற்றிலும் இந்தச் சூலை நீரானது இறுக்கமடைந்து தசைகளை இறுக்கி இடுப்புப்பகுதியில் பயங்கரமான வலியை உண்டுபண்ணும்.

இத்தகைய வலி ஏற்பட அதிக குளிர் பானங்களை அருந்துவதாலும் கம்யூட்டர் முன் இருந்து பல மணி நேரம் வேலை செய்வதாலும், வாகனங்களை வெகுதூரம் ஓட்டுவதாலும் இடுப்புப் பகுதியிலுள்ள வில்விசை நரம்பு பாதிப்படையும். இந்த வில்லிசை நரம்புதான் மனிதன் இருந்து எழுவது, படுத்திருந்து எழும்புவது, பொருட் களைத் தூக்குவது, குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதற்கு உதவியாக இருப்பது

மேற்கண்ட காரணங்களால் இடுப்புப் பாகம் இறுகி நரம்பும் எலும்பும் இணைந்து செயல்படும் இடங்களின் செயல்பாடுகள் குறைந்து போகின்றது. இதனால் குனிந்து நிமிர முடியாத நிலை ஏற்படுகிறது. இத்தகைய பாதிப்பினால் இடுப்புப் பகுதியிலுள்ள எலும்பு மஜ்ஜை உலர்ந்து பசைத் தன்மையை இழந்து விடுகிறது. இதுவும் இருந்து எழ முடியாமைக்கு ஒரு காரணம். இதைத்தான் மருத்துவர்கள் தேய்மானம் என்று சொல்கின்றனர். ஆங்கில மருத்துவத்தில் இதற்கு அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரைக்கின்றனர்.



இந்தக் கீழ் முதுகு வலியால் பலருக்கு சில நேரங்களில் உணர்ச்சி நரம்புகள் பாதிக்கும். இதனால் ஆண், பெண் தாம்பத்திய உறவில் கூட பல பிரச்சினைகள் வரலாம். பெண்களைப் பொறுத்தமட்டில் மாதவிடாய், மற்றும் கர்ப்பம் சம்பந்தப்பட்ட உறுப்புகள் என்பனவற்றில் குறைபாடுகள் ஏற்படலாம்.

### கீழ் முதுகு வலி வராமல் தடுக்க

1. உணவுமுறை சீராக இருக்க வேண்டும்.

2. மலச்சிக்கல் வராது பார்க்க வேண்டும்.

3. வாயுவை உருவாக்கும் உணவுகளை தவிர்த்து எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

4. இரவில் காரம், புளிப்பு உள்ள உணவுகளை தவிர்ப்பது நல்லது.

5. காலை உணவு கண்டிப்பாக சாப்பிட வேண்டும்.

6. தினமும் நார்ச்சத்து (Fiber) நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

7. ஒரே இடத்தில் தொடர்ந்து நீண்டநேரம் இருந்து வேலை செய்பவர்கள் இடையிடையே சிறிது நேரமாவது எழுந்து நடக்க வேண்டும்.

8. பெண்கள் மாதவிலக்கு காலங்களில் போதிய ஓய்வு எடுக்க வேண்டும். இக்காலங்களில் அதிக வேலை செய்தால் முகுதுவலி ஏற்படும்.

9. எலும்புகளை உறுதியாக்கும் உணவு மற்றும் மருந்து வகைகளை கண்டிப்பாக உட்கொள்ள வேண்டும்.

10. யோகாசனத்தில் கீழ் முதுகுத் தண்டை உறுதியாக்கும் சில ஆசனப் பயிற்சிகளைத் தேர்ந்தெடுத்து தினமும் சிறிது நேரமாவது பயிற்சி மேற்கொள்வது முதுகு வலியை முற்றிலுமாக விரட்ட முடியும்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm



Nantha Aiyadurai, B.Eng
Real Estate Broker



Direct: 613-850-9931
Office: 613-288-1999
Web: www.nantha.ca
E-mail: nantha@coldwellbanker.ca
"நம்பிக்கை நாணயம் நந்தா"
Relocation Services
Ottawa<<<<>>>>>GTA
கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது!
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
BUY. SELL. INVEST

# உரித்துரியவர்களுக்காகக் காத்திருக்கும் கவனமில்லாது விடப்பட்ட வங்கிப் பணம்!

## கனேடிய தகவல் தொடர் 255

## *Unclaimed Cashes*

பல வருடங்களாக தங்கள் பணத்தினை வங்கியில் மீளப் பெறாத சுமார் ஆயிரக் கணக்கான வாடிக்கையாளர்கள் எங்கே இருக்கின்றீர்கள்? என்ற ஆதங்கத்துடன் கனேடிய மத்திய வங்கி (Bank of Canada) அவர்களின் விபரங்களை, எதுவிதமான செலவுமில்லாமல் அவர்களே தேடிப் பார்க்கக் கூடியளவுக்கு (Public Access witheout cost) வசதியாகத் தங்கள் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

கனடாவில் உள்ள தமிழர் பலரின் பெயர்களும் அங்கு இருக்கின்றது என்ற ஆதங்கத்தில் அதனை புரிந்து கொண்டு வாசகர்களின் நன்மை கருதி இதனை வெளிக் கொணர்கிறேன்.

'Canadians have billions in unclaimed money. Here's how to find out If you are one of them'
(கனேடியர்களின் பில்லியன் டொலர் பணம் மொத்தமாகக் கோரப்படாது உள்ளது. நீங்களும் அவர்களில் ஒருவரா? என்பது எப்படிக் கண்டு பிடிப்பது என்பது இங்கு உள்ளது) என்ற தலைப்பில் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை இரு வருடங்களுக்கு முன்பு சரியாக வழிகாட்டும் கட்டுரை ஒன்றினை வெளியிட்டிருந்தது.

'Lost money?' 'Find here' பணத்தினை இழந்தீர்களா? இங்கே கண்டு பிடியுங்கள்!
- The Globe & Mail
ஜுலை 19, 2011 என்ற தலைப்பில் 'த குளோப் & மெயில்' வழிகாட்டியிருந்தது.

'Canadians are missing billions and no one seems to care' (கனேடியன்ஸ் மில்லியன் டொலர்களை தவறவிட்டுள்ளனர். ஆனால் எவரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை) என்ற தலைப்பில் வட அமெரிக்காவின் பிரபல்யமான ஆங்கில சஞ்சிகையான 'மக்லீன்ஸ்' (Macleans) அண்மையில் இன்னொரு கட்டுரையினை வெளியிட்டிருந்தது. இது பற்றிய தெளிவுரையினை வாசகர்கள் இலகுவாக புரிந்து கொள்வதற்காக அதனை கேள்வி & விடை வடிவத்தில் தொடர்கிறேன்.

### தவற விடப்பட்டு கோரப்படாத பணம் என்றால் என்ன?

ஏதோ ஒரு வழியில் வங்கிகளில் உள்ள தங்கள் பணம் எவ்வளவு தொகையாக இருந்தாலும், அந்தக் கணக்குடன் எதுவிதமான தொடர்புகளுமில்லாது தாங்கள் இருந்தால் இரு வருடங்களுக்குப் பின்னர் வங்கி கடிதத்தில் அவை தொடர்பாகக் குறிப்பிட்டு ஒரு கடிதம் அனுப்புவார்கள்.

ஐந்து வருடங்களின் பின்பு மீண்டும் ஒரு கடிதம் அனுப்புவார்கள். ஒன்பது வருடங்களின் பின்பு மீண்டும் ஒரு இறுதிக் கடிதம் அனுப்புவார்கள். (இக்காலங்களில் தங்கள் விலாசங்களும் மாறியிருக்கலாம். அதனை தாங்களாக அறிவித்து மாற்ற தவறின் கடிதங்களும் கிடைத்திருக்காது)

தொடர்ந்து பத்து வருடங்கள் கவனிக்காது இருந்தால் அதன் பின்னர் அந்தப் பணம் கனடா மத்திய வங்கியின் கோரப்படாத கணக்கிற்கு (Unclaimed bank balance - Bank of Canada) மாற்றப்பட்டு விடும். அது மிகச்சிறிய தொகையாகவும் இருக்கலாம். பெரிய தொகையாகவும் இருக்கலாம்.

### தமது பணத்தினை எந்த சந்தர்ப்பங்களில் ஒருவர் வெளியே எடுக்காது தவற விடுவார்?

அனேகமாக இவை தொடர்பான தகவல்களை புள்ளி விபர அடிப்படையில் பார்த்தால் முதியவர்கள், நோய் வாய்ப்பட்டவர்கள், மரணமாகியவர்கள் என்ற வரிசையில் உள்ளவர்களே தவறவிட்டுள்ளனர்.

சி.பி.சி செய்தி நிறுவனம் (CBC News) அதற்கான காரணங்களை தெளிவாக ஆய்வு செய்து பின்வருமாறு வெளியிட்டுள்ளது.

- Forgetfulness - மறதிகள்.
- Change of address - விலாச மாற்றங்கள்.
- Change of name - பெயர் மாற்றங்கள்.
- Missing or Damage record - பதிவுகள் தவறுதல் அல்லது அழிதல்.
- Poor estate planning - மரணமாகியிருப்பார்கள். ஆனால் ஒழுங்கில்லாத வாரிசு நியமனம் செய்திருப்பார்கள்.
- Human error - மனித தவறுகள்.
- Avoiding difficult conversations with loved onces.

தங்களின் பாசத்துக்குரியவர்களுக்கு சிக்கலான விடயங்களை அறிவிக்கத் தவறுவது. தொடர்ந்து வயது போன மாறாட்டங்களினால் எங்கே? பணம் இருக்கின்றது என்பது தெரியாமல் இருப்பது.

### எப்படியான வங்கிக் கணக்குகள் பத்து வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்ற நிலையில் மத்திய வங்கிக்கு மாற்றப்படுகின்றது?

- Current/ Chequing & Saving Accounts (சாதாரண வங்கி கணக்குகளான சேமிப்பு கணக்கு, நடைமுறை கணக்கு, காசோலை கணக்குகள் போன்றவை)
- Term deposits & GIC certificated (இது ஒரு வகையான சேமிப்பு முதலீட்டு திட்டம் அதாவது சில வருடங்களுக்கு வெளியே பணத்தினை எடுக்காது தொடர்ச்சியாக வங்கியில் வைத்திருப்பது மற்றது நட்டமடையாது குறிப்பிடப்பட்ட வட்டியில் தொடர்ந்து வளரும் முதலீட்டு திட்டம்)
- Bank drafts, certified cheques, money order's travellers cheque, official cheque. (எவருக்காவது பணம் கொடுப்பதற்காக மணி ஓடர், உறுதிப்படுத்தப்பட்ட காசோலை, அல்லது பிரயாணம் செய்யும் காசோலை என் எடுத்திருப்பீர்கள். தொடர்ந்து அது பயன்படுத்தப்படவில்லையானால் தங்கள் வங்கிக் கணக்கினை விட்டு பணம் வெளியே போயிருக்காது)

### குறிப்பிட்ட ஒரு நபரின் பெயரில் கோரப்படாத பணம் கனடிய மத்திய வங்கியில் தேங்கி உள்ளது என்பதனை எப்படிக் கண்டு பிடிப்பது?

இருவழிகளில் கண்டு பிடிக்கலாம்.
1. இணையத்தளத்தில் கனடிய மத்திய வங்கியின் இணையத் தளத்தினுள் சென்று 'Unclaimed balance registry' என்ற பிரிவினுள் போய் தங்கள் பெயரினை பிரயோகித்துப் பார்க்கும் போது தங்கள் பெயரில் பணம் இருந்தால் தொகை உட்பட சில விபரங்கள் கிடைக்கும்.

மத்திய வங்கி சகலரும் அணுகக் கூடிய வகையில் இதனை பகிரங்கமாக விட்டுள்ளது.

2. தங்கள் வங்கிக் கிளையில் (Bank branch) அணுகிக் கேட்டுப் பார்க்கலாம்.

### பணத்தினை வெளியில் எடுப்பது எப்படி?

கனேடிய மத்திய வங்கியின் பின்வரும் விலாசத்திற்கு கடிதம் எழுதிக் கேட்டு கொள்ளலாம். முறையாக வழிகாட்டுவார்கள்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 36ஆம் பக்கம்...

MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC
mhc
• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இயற்கையின் இரகசியங்கள் (யாவருக்குமான அறிவியல்)

## வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் - சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

சிக்கலை என்னவெனத் தெரிந்து கொள்வதற்கு வெப்பக் கதிர்வீச்சு என்பது பற்றித் தெரிந்து கொள்வோம். பொதுவாகவே பொருட்கள் எல்லாம் தமது வெப்பநிலை காரணமாக, சூழலுக்கு வெப்பக் கதிர்களை வீசுகின்றன. இதனைத்தான் வெப்பக் கதிர்வீசல் என்கிறார்கள். இவ் வெப்பக் கதிர்கள் மின்காந்த அலைகளாகவே சூழலுக்குள் பரவுகின்றன. இது எவ்விதமெனில், பொருட்களின் வெப்ப சக்தியால் அதன் அணுக்கள் அதிர்வுறுகின்றன. அவ்வதிர்வில் இருந்து சக்தியானது மின்காந்த அலைகளாக வெளியேறுகின்றது. இதுதான் வெப்பக் கதிர்வீச்சாகும். இந்த வெப்பக் கதிர்வீச்சில், கரும்பொருட் கதிர்வீச்சின் இயல்புப்படி, நாங்கள் சென்ற தடவையிற் கூறிய எல்லா அலைநீள மின்காந்த அலைகளும் வெளிவீசப்பட வேண்டும். இப்படியாகத்தான் செம்மைப் பொறிமுறை கூறுகின்றது. இந்த எல்லா அலைகளும் காவிவரும் சக்தியையே வெப்பமாக நாமுணருகிறோம்.

இதனை இன்னமும் கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம். பொருளின் வெப்பநிலை சிறிய-தாக இருந்தால், பெருமளவில் சென்னிறக் கீழ் அலைகளே வெப்பக் கதிர்வீச்சில் இருக்கும். அதனால் நாம் அப்பொருளில் எந்தவொரு நிறத்தையும் காணமுடியாது, பொருளில் இருந்து வெப்பம் வருவதையே உணர்ந்து கொள்வோம். பொருளின் வெப்பநிலையை கூட்டும்போது, பொருளின் அணுக்கள் வேகமாக அதிர்வதால், வெப்பக் கதிர்வீச்சால் வெளிவரும் சக்தியின் அளவும் கூடும். அதனால், பொருள் சென்னிறமாக ஒளிர்வது முதலிற் தெரியும். இது வெப்பப் பொருளில் இருந்து சென்னிறக்கீழ் அலைகளுடன் கணிசமான செறிவுடைய சென்னிற அலைகளும் வெளிவருவதைக் காட்டுகிறது. பொருளின் வெப்பநிலையை மேலும் அதிகரிக்க அதி-கரிக்க, பொருள் மஞ்சள் நிறமாகி, மென் நீலநிறமாகி, பின்னர் வெண்ணிறத்தில் ஒளிரும். பொருள் எதனால் ஆனதாக இருப்பினும் இப்படியாகத்தான் வெப்பக்கதிர் வீசல் நிகழும், எங்களது வாழ்வியல் செயற்பாடுகளிலும் நாமிதனை அவதானித்திருப்போம்.

எங்களது சாதாரண மின்குமிழில் இருந்து வெளிச்சம் வருவதைப் பாருங்கள். மின்குமிழின் தங்குதன் இழையின் வெப்பநிலை கிட்டத்தட்ட 2000 பாகை சதம அளவையில் இருக்கும். இம்மின்குமிழின் இழையில் இருந்து மின்காந்த அலைகள் தொடர்ச்சியாக வெப்பக் கதிர்வீசலாக வருகின்றன. இங்கு கட்புலனான ஒளியலைகளும் வெளிவீசப்படுவதால் அது எங்களுக்கு வெண்மையாகத் தெரிகின்றது. கவனமான ஆய்வுகளின்படி பார்க்கையில், மின்குமிழ் வெளிவீசுகின்ற அலைகளில், சென்னிறக்கீழ்க் கதிர்களும், கட்புலனான கதிர்களும் தொடர்ச்சியான அலைவரிசையில் காணப்படுகின்றன. எங்களுக்கு வெள்ளொளி புலப்பட்டாலும், சென்னிறக் கீழ்க் கதிர்களே அதிகமான செறிவில் வெளிவருகிறது என்பதையும் ஆய்வுகள் வெளிப்படுத்தின. புறவூதாக்கதிர்களோ, எக்ஸ்கதிர்களோ மின்குமிழில் இருந்து வெளிவருவதில்லை.

இது இயற்கை எங்களுக்கு அளித்த நல்வாய்ப்பாகும். ஒரு சாதாரண மின்குமிழ்கள் புறவூதாக் கதிர்களையும் வீசுபவையாக இருந்தால், நாங்கள் மின்குமிழ் வெளிச்சங்களையே அனுபவித்திருக்க முடியாது. இப்படியாக எங்களுக்கு நன்மையாக இருந்தாலும், அந்நாளின் இயற்பியல் விதிகளுக்கு இது முரணாக இருந்தது. அதாவது செம்மை இயற்பியல் விதிக-ளின்படி, மின்குழிழ் வெளிச்சத்திலும் புறவூதாக் கதிர்களும் இன்னமும் சக்தி கூடிய எக்றே கதிர்கள், காமாக் கதிர்கள் என்பனவும் வரவேண்டும். ஆனால் இல்லையே. இது, நாங்கள் தெரிந்து கொண்ட கரும்பொருட் கதிர்வீசலின் இயல்பிற்கு முரணாக உள்ளதல்லவா? இன்னமும் விபரமாகப் பார்ப்போம்.

### புறவூதாப் பேராபத்து.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் புள்ளிவிபரவியற் பௌதீகம் அறிமுகமானது. லூட்விக்ஸ் போற்ஸ்மான் என்பவரும் மாக்ஸ்வெல் உம் பெரும் தொகையில் திரண்டிருக்கும் தொகுதியின் இறுதிவிளைவினைக் காண்பதற்கு புள்ளி விபரவியல் முறையினைப் பாவித்தார்கள். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட கனவளவும், வெப்பநிலையும் கொண்ட வாயுவின் அமுக்கத்தைக் கணிப்பதற்கு, பெருந்தொகையான வாயு மூலக்கூறுகளில் புள்ளிவிபர முறையைப் பாவித்து வெற்றியும் கண்டார்கள். அதில் இருந்து புள்ளிவிபர முறையானது பௌதீகத்தில் மெதுவாக உள்ளே நுழையத் தொடங்கிக் கொண்டு இருந்தது.

கரும்பொருட்களின் கதிர்வீச்சிலும் வெளிவருகின்ற சக்தியின் அளவினைப் புள்ளி விபரமுறையிற் காண, லோட் றெய்லிட்ஸ் என்பவர் முயற்சிக்கையில்தான் புறவூதாப் பேராபத்து எனும் பூதம் தெரிந்தது. வெப்பக் கதிர்வீச்சில் கதிர்கள் கொண்டிருக்கக் கூடிய சக்தியின் மொத்த அளவினைக் கணிப்பதற்கு, வெப்பக் கதிர்வீச்சில் வெளிவீசப்படுகிற அலைகளின் செறிவுகளுக்கான சமன்பாடு ஒன்றினை யோன் என்பவருடன் இணைந்து பெற்றிருந்தார். இச்சமன்பாடானது, செம்மைப் பொறிமுறையின்படி, அலைகளின் இயல்புகளைக் கொண்டு பெற்றிருந்தனர். அச்சமன்பாடானது றெய்லிட் - யோன் (Rayleigh – Jean) விதி எனப்படுகிறது. கதிர்வீச்சின்போது வெளியாகும் கதிர்களின், அலை நீளங்களுக்கான செறிவுகளுக்கும், அலைநீளங்களுக்குமான தொடர்பினை வரைபடமாக வரைந்து அவ்வரைபடத்தின் பரப்பினைக் கணிப்பதில் இருந்து கதிர்வீச்சில் வெளிவரும் மொத்த சக்தியை கணிக்கலாம். இதுதான் புள்ளிவிபரமுறை. இவ்வரைபடத்தினை சக்திப் பரம்பல் வரைபடம் எனவும் கூறுவார்கள்.

இங்குதான் சிக்கல் உண்டானது. கரும் பொருள் ஒன்றில் இருந்து எல்லாக் கதிர்களும் வெளிவரவேண்டும். அப்படி வெளிவருகிற அலைகளில், றெய்லிட் - யோனின் சமன்பாட்டின்படி, அலைநீளம் குறைந்த அலைகளின் செறிவானது கூடுதலாக இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால், வெப்பக் கதிர்வீச்சுக்களில் அலைநீளம் குறைந்த அலைகளின் செறிவே கூடுதலாக இருக்க வேண்டும். மேலும் இக்கதிர்வீச்சுகளில், சக்தி வாய்ந்த புறவூதாக் கதிர்களும், அதனைவிட சக்தி கூடிய எக்ஸ் கதிர்களும், காமாக் கதிர்களும் வெப்பக் கதிர்வீச்சுக்களில், சக்தி அளவில் ஆளுமை செய்து கொண்டு வீசப்பட வேண்டும். அவ்விதம் நிகழுமாயின்

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கரும்பொருட்களின் வெப்பக் கதிர்வீச்சானது, புவியின் உயிரினங்கள் எல்லாவற்றிக்கும் பேராபத்தாய் மாறிவிடும். இதனைத்தான் புறவூதாப் பேராபத்து எனக் கூறினார்கள்.

றெய்லிட் - யோனின் விதிப்படி, கதிர்வீச்சில் அலைநீளம் குறையும்போது அவ்வலைகளின் சக்தி அதிகரிப்பதால், அலைநீளம் குறைந்து கொண்டு போக, செறிவு அதிகரித்துக் கொண்டு போக வேண்டும். ஆனால், நான் முன்னரே குறிப்பிட்டபடி, எங்களின் நல்வாய்ப்பாக நடைமுறையில், றெய்லிட் - யோனின் விதி சரியானதாக அமையவில்லை. கரும்பொருட் கதிர்வீச்சில் வெளிப்படும் கதிர்களின் செறிவினை கணித்துப் பார்த்தால், சென்னிறக்கீழ்க் கதிர்கள் வரையில் இந்த முடிவானது மிகச்சரியாகப் பொருந்தியது. அலைநீளம் குறைந்து கொண்டு போக, கதிரின் செறிவு அதிகரித்துக் கொண்டு போனது. ஆனால், அதன் பின்னர் நிலமை மாறத் தொடங்கியது. அலைநீளம் குறைந்து கொண்டு போகையில் கதிர்வீச்சில் வருகிற கதிர்களின் செறிவு குறைந்து கொண்டு வந்து, ஊதாக் கதிர்களின் அலைநீளத்தை விடக் குறைந்த அலைநீளம் கொண்ட கதிர்களின் செறிவு பூச்சியமாக இருந்தது. அதாவது புறவூதாக் கதிர்களோ, எக்ஸ் கதிர்களோ, காமாக் கதிர்களோ கரும் பொருட் கதிர்வீச்சிலோ, அல்லது வெப்பம் கூடிய பொருட்களின் கதிர்வீச்சில் இருந்தோ வெளிவருவதே இல்லை.

பொருட்களின் வெப்பநிலையை அதி-கரித்துப் பார்த்த போது, உயர்செறிவு அலைகள், ஆகக் கூடியதாகக் கட்புல ஒளியலைகளின் வீச்சினுள்ளும் நகர்ந்ததே தவிர, அலைநீளம் குறைந்த, உயர் சக்தி

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 18ஆம் பக்கம்



22வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

SAMY & SONS

Wholesalers & Retailers

SINCE 1994



☑ வரவேற்பு
☑ விலை
☑ தரம்

இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த

☑ தெரிவு
☑ நம்பிக்கை
☑ நாணயம்



அதிரடி மலிவு விற்பனை



Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,
Express Money Transfer, Pawn Broker, Chairs Rental Etc.

ஆகஸ்ட் 05ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 04ம் திகதி வரை

எமது வாடிக்கையாளர்கட்கு! ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!!!



**3 for $10.00**

குருதா ரொப்
சாறி பிளவுஸ், பிறா
சாறி உள்பாவாடை,
ஜட்டி,
பெனியன்
இன்னும் பல.

**Each $10.00**

டெனிம் பான்ஸ்,
Dress பான்ஸ்,
சேட், குர்தி சேட்,
பட்டுபாவாடை செற்
பான்சி Frocks,
சுரிதார் (All Sizes)

மில்க் குக்கர்
ஸ்ரீமர், தோசைச்சட்டி
பிறஷர் குக்கர்
வாமர், புட்டுக்குடம்
றைஸ் குக்கர்
றொட்டி மேக்கர்
(சுமித், பிறீத்தி, பிறீமியர்)
கனடாவில் எங்கும்
பெற்றுக்கொள்ள முடியாத
மலிவு விலையில்

புதிய வரவுகளாக
பட்டு, கட் வேக், பிறைடல்
சொவ்ற் சில்க்,
ஹாவ் அன் ஹாவ்
சிக்குயின்,
கொட்டன் சாறிகள்
ஸ்பெஷல் சுரிதார்
பான்ஸி லங்கா சூட்
குருத்தா பிளவுஸ்
குருத்தா சூட்
இன்னும் பல
எங்கும் கண்டிராத மலிவு விலையில்



OPEN
7 Days
10:00 am-
9:00 pm

$300 மேல்
புடவைகள் கொள்வனவு
செய்யும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு
ஒரு றைஸ் குக்கர்
இலவசம்

பான்ஸி பொருட்கள் 50¢ தொடக்கவிலையில்

TEL: 416-298-1599

Tel: 647-875-5002 Cell: 647-239-SAMY (7269)

1884 B Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com E-mail: samyandsons@gmail.com

$150 மேல்
புடவைகள் கொள்வனவு
செய்யும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு
ஒரு ஹொட் பொக்ஸ்
இலவசம்

மலிவோ மலிவு மலிவு மலிவோ மலிவு மலிவு மலிவு

எண்ணில் அடங்காத பொருட்கள் மலிவு விலைகளில் ஒரு முறை வந்து பாருங்கள்

அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

# சர்க்கரை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

தன்மைக்குத் தகுந்த அளவிலும் சுரக்கிறது. அவ்வளவு உமிழ் நீரும் உணவின் முழுமையான ஜீரணத்திற்காக உபயோகப் படுத்தப்படுகிறது. பசி எப்போது இல்லையோ, அப்போதுதான் உணவைத் தள்ளுவதற்கு ருசி தேவைப் படுகிறது. ருசியின் மிகுதியால் சுரக்கப்படும் உமிழ்நீர், ஜீரணத்துக்குப் பயன் படாது. ஜீரணக் கேட்டிற்கே வழி வகுக்கும். பசிக்காக சுரக்கும் உமிழ் நீரும் எவ்வாறு உடல் நலத்துக்கும், உடல் நலக் கேட்டிற்கும், வழி கொள்ளுகிறது என்பதைக் கீழ்வரும் உதாரணம் நமக்கு விளக்கும். ஏழை ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரே ஒரு காய்ந்த ரொட்டித்துண்டு மட்டும் கிடைத்தா லும் போதும் அதைக் கொஞ்சம் கொஞ்ச மாக நாள் முழுமைக்கும் பயன்படுத்துவார்.

நன்றாகப் பசியுடன் இருக்கும் ஒருவருக்கு எந்த ருசியும் இல்லாத உணவுப் பண்டங் களை வைத்தாலும், அதுவே அவருக்கு ருசிக்கும். அந்த அளவுக்கு உணவிலுள்ள இயற்கையான ருசியைப் பிரித்தெடுத்து உணரக் கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சுரக்கும் அவருடைய உமிழ் நீர்! ஆனால், வெறும் ருசிக்காகவே சாப்பிட அமர்ந்திருக்கும் ஒருவருக்கு, அவருடைய உமிழ்நீரானது உணவை ஜீரணிக்க எந்தவித சக்தியும் பெறாத வேற்று நீர்தான்! உணவை வாயில் வைத்ததும், ருசி நாக்கில் பட்டதும் மென்று சாப்பிடக் கூடமாட்டார்! அப்படியே விழுங்கி விடுவார். ஒரு கவளத்தை விழுங்கு முன்னரே, மாற்றாக கவளத்தை வாய்க்குள் திணிப்பார். அந்தளவுக்கு மசாலாக்களின் ருசி, நாக்கு முழுவதும் இருந்துகொண்டே இருக்க வேண்டும். இந்த விதத்தில் உமிழ்நீர் அதிகமான ருசியின் காரணமாக தேவையற்ற முறையில் தூண்டப்படும்போது, அந்த உமிழ் நீர் நாளடைவில் ஜீரண சக்தியை இழக்கிறது.

ஜீரணிக்கப்படும்போது உணவானது, இறுதி யாக குளுக்கோஸாக மாற்றப்படுகிறது. இந்தக் குளுக்கோஸ் தான் உடல் செல்கள் அனைத்தினாலும் உபயோகப்படுத்தப்படு கிறது. ஒவ்வொரிடத்திலும் உள்ள ஜீரண உறுப்புகள் மூலமாக அவரவர்கள் உண்ட உணவு ஜீரணிக்கப்பட்டு குளுக்கோஸாக மாற்றப்படும்போது, அவரவர் உடல் இயற்கைக்கு ஏற்றவாறு தனித்தன்மை வாய்ந்ததாக மாறுகிறது. இந்த வகையில், ஜீரணத்தைக் கடைசி நிலையில் வெளிப் படுத்தப்படும் வைட்டமின்களும், தாதுக்களும் குளுக்கோசும் ஜீரண உறுப்புகளின் இயக்கத் திறன் மூலம் வெளிப்படுத்தப்படும்போது தான், அவை யனைத்தும் குறிப்பிட்ட நபருக்கு ஒத்துக் கொள்ளக்கூடிய தனித் தன்மையைப் பெறுகிறது.

நன்றி: பஸூலூர் ரஹ்மான்

# மாறாத...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ரொறொன்ரோவின் வெவ்வேறு பகுதிகளில் ஒன்றிற்கு மேற்பட்ட வாங்குபவர்கள் போட்டி போட்டு ஆதனத்தை வாங்குவ தனையும் காணலாம்.
சில பகுதிகளில் 15 இற்கு மேற்பட்ட வாங்குபவர்களும் போட்டி போடுகின்றார் கள். ஏற்கனவே இந்நிலைமை நிலத்துடன் ஆன வீடுகளிலே காணப்பட்டது. ஆனால், இன்றைய நிலைமை அடுக்குமாடி மனைகளிலும் காணலாம்.

உதாரணமாக ஒன்றின் மூலம் விளங்கப் படுத்தலாம். மார்க்கம்&செப்பேட் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் அமைந்துள்ள ஒரு மனை ஏற்கனவே கடந்த வருடமும், அதற்கு முந்தைய வருடம் சந்தைப்படுத்தப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட காலத்தில் விற்க முடியாமல் போயிற்று, அதற்கு அப்புறம் குறிப்பிட்ட மனை வாடகைக்கு விடப்பட்டது. இந்த வருடம் ஓகஸ்ட 10, 2016, கடந்த காலங் களில் சந்தைப்படுத்தப்பட்ட விலையை விட $20,000 அதிகமாக இம்முறை சந்தைப்படுத்தப்பட்டது. சந்தைப்படுத்தப் பட்ட ஒரே நாளில் இரு வாங்குபவர்கள் போட்டி போட்டு, சந்தைப்படுத்தப்பட்ட விலைக்கே, எதுவித முக்கிய நிபந்தனைகளும் இன்றி (Conditions) வாங்கியுள்ளார்கள்.

இதற்குரிய காரணம் என்னவாகலாம். ஆதன வியாபாரச் சந்தைக்கு வருபவர்கள் நிலத்துடன் சேர்ந்த வீடுகள் வாங்குவதற் கான நிலைமை கையைத் தாண்டிச் செல்வதால் அடுக்குமாடி மனையில் முதலிட எண்ணியது காரணமாகலாம் அல்லது வாடகைக்கு பெறுவது இறுக்கமாக இருப்பதாகலாம்.

**புதிய அடுக்குமாடி மனைகளின் விற்பனை**

| பகுதி | விலை அதிகரிப்பு (வருடக்கணக்கில்) | சதுர அடியின் சராசரி விலை |
|---|---|---|
| ரொறொன்ரோ பெரும்பாகம் (GTA) | 2% | $582 |
| ரொறொன்ரோ | 4% | $662 |
| ரொறொன்ரோ மத்திய பகுதி | 7% | $724 |

குறிப்பு - ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வாழ்ந்த அடுக்குமாடி மனைகளின் சதுர அடி விலை (Resale Condeo $498)

# றியோ ஒலிம்பிக்கில் ஈழத்தமிழன்

துளசி தர்மலிங்கம் எனும் ஈழத்தமிழன் றியோ ஒலிம்பிக் போட்டியில் மங்கோலியர் CHINZORIG BAATARSUKH இற்கு எதிராக தனது முதலாவது குத்துச் சண்டையை ஆரம்பிக்கிறார்



தனது 18வது வயதில் ஜேர்மனியின் குத்துச்சண்டை மேடைகளில் தோன்றிய துளசி தருமலிங்கம் கட்டார் நாட்டுக்காக விளையாடுகிறார்.

இலங்கையில் பருத்தித்துறை பிரதேசத் தில் உள்ள புலோலியைச் சேர்ந்த நளினி, தருமலிங்கம் தம்பதிகளின் மகனான துளசி (மாறன்) தர்மலிங்கம் கடந்த ஆண்டுவரை 120 குத்துச் சண்டை போட்டிகளில் பங்குபற்றி இருக்கின்றார். அதில் 75 வெற்றிகள், 6 சமநிலை கண்டிருக்கின்றார். உலகத் தரத்தில் நடந்த போட்டியில் கால் இறுதிப் போட்டியை எட்ட முடியா விட்டாலும், ஏழுமுறை நகரச்சுற்று வட்டத்திலும், ஆறு முறை நிடர்சாக்சன் (Nidersachsen) மாநிலத்தில் சம்பிய னாகவும், ஒரு தடவை ஜேர்மனி நாட்டின் சம்பியனாகவும் வந்திருக்கின்றார்.

யூலை 7ந் திகதி அன்று நடந்த Light Welterweight மூன்று சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்ரினா நாட்டைச் சேர்ந்த Carlos Aquino வீரனை 3-0 என்ற புள்ளியில் வென்று றியோவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் விளையாடத் தெரிவாகி இருக்கின்றார்.

இதுவரை தன்னுடன் போட்டியிட்ட தென் ஆபிரிக்கா, சீனா, உக்ரெயின், போலந்து, சுவிற்சலாந்து, பொஸ்வானா நாட்டு குத்துச்சண்டை வீரர்களை வென்ற துளசி தருமலிங்கம், ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டிகளில் அனைத்து நாட்டு வீரர்களையும் வென்று பதக்கம் பெற்று வர நாமும் வாழ்த்துவோம்.

# இயற்கை...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்ட அலைகள் வெளிவரவே இல்லை. இதனாற்றான் உயர்வெப்பநிலையில் பொருட்கள் சிவப்பு நிறமாகி, மென்நீல நிறமாகி, மேலும் வெப்பநிலை அதிகரிக்க, வெண்ணிறத்தில் ஒளிர்கின்றன. மிகவும் உயர்ந்த வெப்பநிலை கொண்ட பொருட் களின் கதிர்வீச்சுகளில் மட்டும் புறவூதாக் கதிர்களின் வீச்சின் ஆரம்பநிலையின் சில கதிர்கள், அதுவும் செறிவு குறைந்த அளவில் வெளிவீசப்படுவதை பரிசோதனை கள் காட்டின.

ஆக, நடைமுறையில் கரும்பொருட் கதிர்வீச்சில் புறவூதாப் பேராபத்து இல்லை. அதனால்தான், மின்னொளியில் நாங்கள் பயமில்லாது சாதாரணமாகவே இருக்கி றோம். ஆனால், அக்காலத்தில் இருந்த அறிவியல் நிலையின்படி, கரும்பொருட் கதிர்வீச்சில் புறவூதாப் பேராபத்து நிகழ வேண்டுமே, நடைமுறையில் ஏன் நிகழ வில்லை? 19ம் நூற்றாண்டின் இறுதி யிலேயே இந்தச் சிக்கலை விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள்.

வெளிச்சம் பற்றிய இரகசிய சுவாரசியங்கள் இன்னமும் இருக்கின்றன. அடுத்த தடவை யும் இன்னமும் கொஞ்சம் பாரப்போம்.

## றியோ ஒலிம்பிக் பதக்கங்களின் விபரம்

| Rank | Country | Gold Medal | Silver Medal | Bronze Medal | Total |
|---|---|---|---|---|---|
| 1. | United States | 24 | 18 | 18 | 60 |
| 2. | China | 13 | 11 | 17 | 41 |
| 3. | Great Britain | 10 | 13 | 7 | 30 |
| 4. | Japan | 7 | 3 | 14 | 24 |
| 5. | Russia | 6 | 9 | 8 | 23 |
| 6. | Australia | 6 | 7 | 9 | 22 |
| 7. | France | 6 | 7 | 5 | 18 |
| 8. | Italy | 5 | 8 | 5 | 18 |
| 9. | Germany | 8 | 5 | 3 | 16 |
| 10. | South Korea | 6 | 3 | 4 | 13 |
| 11. | Canada | 2 | 2 | 8 | 12 |

100% PURE VEGETARIAN KITCHEN 100% PURE VEGETARIAN KITCHEN 100% PURE VEGETARIAN KITCHEN

# SULASIE சுளசி

## FOODS SWEETS & PARTY SUPPLIES

தற்போது அன்பான வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க

**Friday & Saturday Special ஆக Home Made**

**Jaffna Style Milk Hopper (பால் அப்பம் - Paal Appam)**

**Plain Hopper with Katta Sambol (வெள்ளை அப்பம் + கட்டசம்பல்)**

**Take out ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**

## TAMIL FEST - தமிழர் தெரு விழா

தமிழர் தெரு விழா நடைபெறும் மையப்பகுதியில் 3011 Markham Road, # 57 இல் சந்திரமௌலீஸ்வரர் கோயிலுக்கு அருகில் Markham & Mc Nicoll ற்கும் Markham & Passmore ற்கும் இடையில் Sulasie Foods ஸ்தாபனம் அமைந்துள்ளது.

**August 26 Friday, 27 Saturday & 28 Sunday**

ஆகிய மூன்று நாட்களிலும் காலையிலிருந்து இரவு வரை

**Milk Hopper (பால் அப்பம் - Paal Appam)**

**Plain Hopper with Katta Sambol**

**(வெள்ளை அப்பம் + கட்டசம்பல்)**

என்பனவற்றை **சுடச்சுட** எவ்வளவு வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்

என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

***VISIT US OUR WEBSITE: www.sulasiefoods.com***

***LOCATED @ THE MARKHAM MCNICOLL CENTRE***
***CLOSE TO CHANDRAMOULEESWARAR (SIVAN) TEMPLE***
***BETWEEN MCNICOLL AND PASSMORE ON MARKHAM ROAD***
***3011 MARKHAM ROAD, UNIT #57, SCARBOROUGH, ON. M1X 1L7***

**TEL: 416-879-2725, 416-712-2020, 416-289-3194 FAX: 416-519-4696**

100% PURE VEGETARIAN KITCHEN 100% PURE VEGETARIAN KITCHEN 100% PURE VEGETARIAN KITCHEN

# அஞ்சலி - பஞ்சு அருணாசலம்

## திரைத்தொண்டர்

கவிஞர், கதாசிரியர், தயாரிப்பாளர், இயக்குநர், பாடலாசிரியர் எனப் பன்முகம் கொண்ட இன்றைய தமிழ்த் திரை ஆளுமைகளில் மூத்தவர் பஞ்சு அருணாசலம். இதுவரை 99 திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதியுள்ள பஞ்சு அருணாசலம். நூறாவது கதையை படமாக்கும் முயற்சியில் இருந்தபோது, அதைப் பாதியிலேயே நிறுத்துவிட்டு விடைபெற்றுவிட்டார். மட்டுமல்லாமல், ஆனந்த விகடன் பத்திரிகையில் இவர் திரையுலக அனுபவங்களை எழுதி வந்த 'திரைத் தொண்டர்' தொடரும் பாதியில் நிற்கிறது. தனது இறுதி மூச்சு வரை தமிழ் திரைத்துறையுடன் உறவாடிக் கொண்டிருந்த பஞ்சு அருணாசலம் மறைவு தமிழ் திரைத்துறைக்கு பேரிழப்பு.

தனது பதினேழாவது வயதில் சென்னைக்கு வந்த பஞ்சு அருணாசலம், ஆரம்ப காலத்தில், தனது சித்தப்பாவும் திரைப்பட தயாரிப்பாளருமான ஏ.எல்.சீனிவாசனின் தயாரிப்பு நிர்வாகத்தில் உதவியாளராக வேலை செய்தார். அக்காலகட்டத்தில் இவர் எழுதிய கவிதைகளைப் படிக்க நேர்ந்த கவிஞர் கண்ணதாசன், அவற்றால் ஈர்க்கப்பட்டு, இவரை தனது உதவியாளராகச் சேர்த்துக் கொண்டார். கண்ணதாசனின் உதவியாளராக சேர்ந்தது, தன்னைப் பட்டை தீட்டிக்கொள்ள பஞ்சு அருணாசலத்துக்கு உதவியது ஒருபக்கம் இருக்க, இவரது ஆளுமை கண்ணதாசனைப் பாதித்து அவரிடமும் நிறைய மாற்றங்களை உருவாக்கியது. மிக முக்கியமாக அக்காலகட்டத்தில் சிவாஜிகணேசனுக்கும் கண்ணதாசனுக்கும் இடையே இருந்த மோதல் பஞ்சு அருணாசலத்தினாலேயே தீர்க்கப்பட்டது. அதன்பிறகுதான் சிவாஜி கணேசனின் பா வரிசை படங்களுக்கு கண்ணதாசன் தொடர்ந்து பாடல்கள் எழுதினார் என்பது வரலாறு.

கண்ணதாசன் உதவியாளராக இருந்ததால் முதலில் தமிழ்த் திரைக்கு பாடல் ஆசிரியராகவே அறிமுகமானார் பஞ்சு அருணாசலம். இன்றும் தமிழ்நாடு முழுக்க திருமண விழாக்களில் தவறாமல் ஒலிக்கும் 'மணமகளே மருமகளே வா வா...' பாடல் பஞ்சு அருணாசலம் எழுதியதுதான். மொத்தம் பஞ்சு அருணாசலம் 400 பாடல்கள் எழுதியுள்ளார். அதில் 300 பாடல்கள் பெரிய வெற்றியைப் பெற்ற பாடல்கள். "திகட்டல் இல்லாத சொற்களைக் கொண்டு வலிந்து புகுத்தாத மொழிநடையில் சரளமான பொருள் விரிவைத் தரும் கற்பனையோடு எழுதுவது பஞ்சு அருணாசலத்தின் பாணி. மெட்டோடு அத்துணை இலகுவாகப் பொருந்தும் சொற்றொடர்களை அமைப்பதில் நிபுணர். மெட்டில் குழைந்து மேலெழும் பஞ்சு அருணாசலத்தின் வரிகள் காலங்கடந்தும் கேட்டாரைப் பிணிக்கும் தகைமை உடையன" என்கிறார் கவிஞர் மகுடேஸ்வரன்.



"அன்னக்கிளி" பாடல் பதிவின்போது, இளையராஜாவுடன் பட அதிபர் பஞ்சு அருணாசலம், "அன்னக்கிளி" கதாசிரியர் செல்வராஜ்.

பஞ்சு அருணாசலம் எழுதிய முதல் பாடல் 'கலங்கரை விளக்கம்' படத்தில் இடம்பெற்ற 'பொன்னெழில் பூத்தது புதுவானில்... வெண்பனி தூவும் நிலவே நில்...' என்னும் பாடல்தான். அது உட்பட 'கண்மணியே காதல் என்பது கற்பனையோ', 'காதலின் தீபம் ஒன்றை ஏற்றினாளே - என் நெஞ்சில்', 'காதல் ஓவியம் பாடும் காவியம்', 'அன்னக்கிளி உன்னத் தேடுதே', 'என்னுயிர் நீதானே' போன்ற இன்றும் கேட்கத் தூண்டும் பல அக்கால பாடல்கள் இவருடையவைதான்.

பொதுவாக கண்ணதாசன் காலையில்தான் பாடல்கள் எழுதுவார். பாட்டெழுதி முடித்துவிட்டு, மதிய சாப்பாட்டுக்குப் பிறகு தொடங்கி மாலைவரை, கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் தூங்குவது கண்ணதாசன் வழக்கம். இந்த இடைப்பட்ட நேரத்தை, தேவர் பிலிம்ஸ் கதை இலாக்காவிற்குச் சென்று கதை விவாதத்தில் ஈடுபடுவதில் பயன்படுத்தியிருக்கிறார் பஞ்சு அருணாசலம். பிறகு தனியாக கதைகள் எழுதத் தொடங்கினார். ஆரம்பத்தில் இவர் கதையில் எடுக்கப்பட்ட படங்கள் அனைத்தும் படப்பிடிப்போடு பாதியிலேயே நின்றுவிட்டிருக்கிறது. இப்படியே எட்டுப் படங்கள் பாதியிலேயே நின்று போக 'பாதிக் கதை பஞ்சு' என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

இன்னொருவராக இருந்தால் திரைத் துறையை விட்டே விலகியிருப்பார். ஆனால், மன வருத்தம் இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து போராடியிருக்கிறார் பஞ்சு அருணாசலம். தொடர் முயற்சியின் பலனாக இவரது கதையில் முதல் படமாக வெளிவந்தது 'ஹலோ பார்ட்னர்'. இரண்டாவது படமான 'கல்யாணமாம் கல்யாணம்' பெரிய வெற்றியை பெற, அடுத்தடுத்து படங்கள் அணி வகுக்க தொடங்கியது. தொன்னூற்றி ஒன்பது படங்கள் இவரது கதையில் வெளிவந்துள்ளன. அதில் 75 வெற்றிப் படங்கள்.

எஸ்.பி. முத்துராமன் இயக்கத்தில் மட்டும் 35 படங்களுக்கு பஞ்சு அருணாசலம் கதை எழுதியுள்ளார். இதில் 23 படங்கள் ரஜினிகாந்த் கதாநாயகனாக நடித்தவை. பஞ்சு அருணாசலம் கதையில் ரஜினிகாந்த் நடித்த முதல் படம் 'கவிக்குயில்.' கதை எழுதியது மட்டுமல்லாமல் 'புவனா ஒரு கேள்விகுறி', 'காயத்ரி', 'ப்ரியா' ஆகிய மூன்று படங்களை ரஜினியை வைத்து தொடர்ச்சியாக தயாரித்த பெருமையும் பஞ்சு அருணாசலத்துக்கு உண்டு. "என்னை அறிமுகப் படுத்தியது குருநாதர் பாலசந்தர் என்றாலும் என்னை சூப்பர் ஸ்டார் ஆக்கியது பஞ்சு அருணாசலம்தான். என் சினிமா கேரியரை வடிவமைத்ததே அவர்தான்" என்று இது குறித்து ஏற்கெனவே சொல்லியிருக்கிறார், ரஜினிகாந்த்.

ரஜினிகாந்த் போலவே கமலஹாசனுக்கும் 'கல்யாணராமன்', 'தூங்காதே தம்பி தூங்காதே' மைக்கேல் மதன காமராஜன்' 'அபூர்வ சகோதரர்கள்' உட்பட நிறையப் படங்களை இவர் எழுதியுள்ளார். எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் நாயகர்கள் ஆட்சிக்குப் பிறகு தமிழ் திரையுலகில் ஏற்பட்ட மாற்றத்தை மாற்றிய 'டிரெண்ட் செட்டர்' படங்கள் எனக் குறிப்பிடப்படும் ரஜினியின் 'முரட்டுக்காளை', கமலின் 'சகலகலா வல்லவன்' இரண்டு படங்களின் கதையும் பஞ்சு அருணாசலம் எழுதியவை தான்.

இதுபோல் இன்னொரு பெருமையும் பஞ்சு அருணாசலத்துக்கு உண்டு. அது 'அன்னக்கிளி' படத்தை தயாரித்ததுடன் அதில் இசையமைப்பாளர் இளையராஜாவை அறிமுகப்படுத்தியது. அன்னக்கிளியின் அனைத்துப் பாடல்களையும் இவரேதான் எழுதியுள்ளார். எல்லாப் பாடல்களும் பெரிய வெற்றியைப் பெற்றதுடன் இளையராஜாவுக்கு பலமான அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத்தன. அன்னக்கிளி படத்தின் பெரிய வெற்றி எந்தளவுக்கு தமிழ்த் திரையுலகை பாதித்திருந்தது என்பதை, அதைத் தொடர்ந்து சிட்டுக் குருவி, கவிக்குயில், பாலூட்டி வளர்த்த கிளி, செல்லக்கிளி, மாந்தோப்புக் கிளியே, உல்லாசப் பறவைகள் எனத் தொடர்ந்து ஒரே பறவைப் பெயர்களாகத் தமிழ்த் திரைப் படங்கள் தலைப்பைச் சூட்டிக் கொண்டு வெளிவந்ததில் இருந்து உணர்ந்து கொள்ளலாம். இதில் 'கவிக்குயில்' பஞ்சு அருணாசலம் தயாரிப்புதான். இதிலும் இசையமைப்பாளர் இளையராஜாதான். இப்படத்தில் இடம்பெற்றிருந்த 'குயிலே கவிக்குயிலே...' எனும் பாடல் இன்றும் திரும்பத் திரும்ப கேட்கத் தூண்டும் பாடல்.

மொத்தம் 55 படங்களை தயாரித்திருக்கிறார் பஞ்சு அருணாசலம். தாம் தயாரிக்கும் எல்லாப் படங்களுக்கும் திரைக்கதை, வசனம், பாடல்களின் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும் வழக்கம் பஞ்சு அருணாசலத்திடம் உண்டு. அதுவே படத்தின் வெற்றியை பாதி உறுதி செய்துவிடும். அந்த அளவிற்குத் திரைக்கதை விற்பன்னர். வெகுஜன திரைப்படங்கள் தான் பஞ்சு அருணாசலத்தின் களம் என்றாலும், 'அவள் அப்படிதான்' ருத்ரய்யாவின் இரண்டாவது படமான 'கிராமத்து அத்தியாயம்', மகேந்திரன் இயக்கிய 'பூட்டாத பூட்டுகள்' போன்ற வித்தியாசமான முயற்சிகளையும் ஊக்கப்படுத்தி தயாரித்திருக்கிறார். நான்கு படங்களை இயக்கியுள்ளார். இளைய ராஜாவை அறிமுகப்படுத்தியது போலவே யுவன் ஷங்கர் ராஜாவையும் அறிமுகப்படுத்திய பெருமை (படம்: பூவெல்லாம் கேட்டுப்பார்) பஞ்சு அருணாசலத்துக்கு உண்டு.

பாதி திரைப்படமாக நிற்கும் பஞ்சு அருணாசலத்தின் 100ஆவது கதையை முழுத் திரைப்படமாக்குவதுதான் தமிழ்த் திரையுலகம் அவருக்கு செய்யும் சரியான அஞ்சலி.

- சிவதாணு -

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

கனடாச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com


BRAND NEW COMMERCIAL CONDO UNITS FOR SALE...
Smart Vision
Brilliant Decision
Price Starting From $86,000
MIDLAND/FINCH/KENNEDY (Most Desirable Location)
188 SILVERSTAR COMMERCIAL CENTER
COMPLETION FALL 2018
Four-storey commercial center
High Rental yield
Size Starting From 294sq.ft
147 Surface Parking
9' Finished T Bar Ceiling
Basic Finishes By Developer
Maintanance Fee
$0.45/month/sq.ft.
Suitable for Small to Medium business like,
legal offices,accounting firms,law offices,education centers,advertising agencies,insurance offices, cafe,family lending,travel agency,worship place, mortgage &real estate offices, driving schools and many more...
Why do you want to Lease?
For Further Info Call:
416 321 6969
"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"
HomeLife/GTA Realty Brokerage*
*Independently Owned & operated


Parkway Mall Chatr Mobile Re-branded SPECIAL
$50 OFF COUPON
Bigger Network Coverage Faster Internet !!
$25/mo
UNLIMITED Provincial-wide Calling, Caller ID, Voice Mail and more...
$40/mo
Free Caller ID & Voice Mail
UNLIMITED Data, Internet, UNLIMITED Download
UNLIMITED Provincial-wide Calling & UNLIMITED Text Messaging
IPhone 5s 16GB $549.99 $299.99
Samsung Galaxy S6 32GB $729.99 $429.99
Samsung Galaxy Note 4 32GB $799.99 $399.99
Motorola Moto X (2nd gen) $499.99 $129.99
Samsung Galaxy Grand Prime $399.99 $99.99
Samsung Galaxy Ace 2x $199.99 $59.99
ZTE Salem 3G $129.99 $0
No Contract !! No Credit Check !!
All phones working to Chatr Mobile!!! Even Iphone 4, Bring in your own phone !!!
ONLY at
Chatr Mobile @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough
M1R4B8, 416-999-9229
chatr MOBILE
Limited time offer and may only be available to new activations at Parkwy Mall Chatr Mobile. Taxes are extra. Restrictions may apply on combining offers with other offers or promotions. All unlimited services must originate and be used within the Chatr In-zone. Conditions may apply, please ask for details. Premium and special numbers are excluded. Fair usage policy 1 GB allotment will be applied on the data in $40 plan & restriction will be applied. Additional terms and conditions apply. Subject to change without notice. ©2016 Chatr Mobile logo are trademarks of Chatr Mobile. Other trademarks shown may be held by their respective owners. All rights reserved. Parkway Mall Chatr Mobile additional terms and conditions: $50 coupon can only be applied on phones and have been already applied on above phones. Special is only available at Parkway Mall Chatr Mobile. Limited time offer. Third party handsets are sold by independent store owners to customers directly. Return, exchange and warranty for these handsets may vary. Please ensure that you enquire further details from stores before you make your purchase.



Lebara's
Tamil Fest
தமிழர் தெரு விழா
IDEAL DEVELOPMENTS
GRAND
3 DAY
CELEBRATION
AUGUST
26,27,28
MARKHAM ROAD, TORONTO
TITLE SPONSOR
Lebara
POWERED BY SPONSOR
IDEAL DEVELOPMENTS
ZONE SPONSORS
Aalayaa
ADAGA Catering
BonaFide Mortgage
COMPUTEK COLLEGE
HONDA Formula Honda Where You're Treated like Family.
NAVA LAW PROFESSIONAL CORPORATION
SUTHAHOMES.ca
UBER
MEDIA SPONSORS
ATN
doto
LANKASRI
metrolandmedia toronto
OFFICE
10 Milner Business Court, Suite 513
Toronto, ON M1B 3C6
416 240 0078
tamilfest.ca

# “இளம் எழுத்தாளரான ஆரணியின் ஆக்கங்கள் இளைஞர்களுக்கு ஆர்வத்தினை ஏற்படுத்தும்!”

இம்மாதம் 5ஆம் திகதி மாலை செந்தாமரை பத்திரிகையின் நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற ஆரணியின் “பாட்டி சுடாத வடை” என்ற நூல் வெளியீட்டு வைபவம் நடைபெற்றது. விளம்பரம் பத்திரிகையின் பதிப்பாளரான திரு.ராஜா மகேந்திரன் விழா விற்குத் தலைமை தாங்கினார்.



அவர் உரையாற்றியபோது “செல்வி ஆரணியின் தந்தையார் ஞானநாயகனை எனக்கு முப்பது வருடங்களுக்கு மேலாகத் தெரியும். அவர்கள் அல்பேட்டாவில் இருந்து 2008ஆம் ஆண்டு இங்கு பெல்விலுக்கு இடம் மாறி வந்தபோது ஆரணியின் தமிழறி வினை அறிந்து நான் ஆச்சரியமுற்றேன். அதனால் தொடர்ந்து தமிழ் மொழியினைக் கற்பதற்காக அவவை வரசித்தி விநாயகர் ஆலயத்தினால் நடத்தப்பட்டு வரும் தமிழ்ப் பாடசாலையில் அனுமதித்தோம். அவரது எழுத்தாற்றலைக் கண்டு வியப்புற்ற விளம்பரம் எழுத்தாளரான திருமதி லலிதா புறூடி அவரை விளம்பரம் பத்திரிகைக்கு எழுது மாறு கேட்டார். அதனால் ஆரம்பத்தில் நீதிக் கதைகளை எழுதி வந்த ஆரணி பின்னர் வெவ்வேறு கட்டுரைகளை எழுதி அவற்றுக்கான சித்திரங்களையும் அவரே வரைந்தார். இன்று வெளியிடப்படும் அவரது “பாட்டி சுடாத வடை” என்ற நூலின் முன்பக்க அட்டைக்கான படத்தினையும் அவரே வரைந்தார். இதுவரையில் அவர் 125க்கு மேற்பட்ட விடயங்களை எழுதியுள்ளார். அவற்றுள் 50க்கு மேற்பட்டவை நீதிக் கதைகளாகும். இவரது படைப்புக்கள் ஏனைய சிறுவர் சிறுமியர்களுக்கு முன்னோடியாக இருக்கும் என நம்புகின்றேன்” எனக் கூறினார்.



- வீரகேசரி மூர்த்தி -

கவிநாயகர் திரு. கந்தவனம் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்திய போது “கனடா வில் பிறந்து தமிழை முறையாகக் கற்று தமிழ் நூலை வெளியிடும் திறமை கொண்ட முதலாவது சிறுமி செல்வி ஆரணி ஞானநாயகன் தான். அவரிடம் கற்பனைத் திறன் நிறைய உண்டு. நன்றாக எழுதத் தெரிந்தால் மாத்திரம் போதாது. கதைகளுக் கான சிறந்த உத்தியும் அவசியமாகும். கடவுள் கிருபையினால் அவர் அதுவும் கிடைக்கப் பெற்றுள்ளார். அதுவும் கனடா வின் மூத்த பத்திரிகையாக 26 ஆண்டு காலமாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகையில் எழுதியுள்ளார். விளம்பரம் பத்திரிகை செல்வி ஆரணிக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்” என்றார்.

ஆரணிக்கு தமிழ் போதித்த ஆசிரியையும், சிறந்த பேச்சாளருமான திருமதி கோதை அமுதன் உரையாற்றிய போது “புலம் பெயர்ந்த நாடான கனடாவில் நமது இளம் தலைமுறையினர் தமிழ் பயில்வது சற்றுக் குறைவாக இருந்தது. ஆனால் தற்போது அந்நிலை மாறி அதிகமானோர் தமிழ் மொழியினை ஆர்வத்துடன் கற்று வருகின்றனர். ஆசிரியர்கள் போதிப்பதை அவதானமான கேட்டுணர்ந்து கொள்ளும் திறமை மிக்க ஆரணி பின்னர் தான் கற்றவற்றை சமூகத்துக்குத் திருப்பி வழங்கும் திறமையும் கொண்டுள்ளார். அதனை நாம் பாராட்ட வேண்டும்” எனக் கூறி ஆரணிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நூலின் முதற் பிரதியினை திருமதி சபாரத்தினம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.





தமிழர் தகவல் ஆசிரியர் திரு. திருச்செல்வம், டாக்டர் லம்போதரன் உட்பட மற்றும் பலர் ஆரணியின் முயற்சியைப் பாராட்டிப் பேசினார்கள். “இளம் வயதிலேயே இத்தகைய எழுத்தாற்றல் கைவரப் பெற்ற ஆரணியின் பெயர் “கின்னஸ்” புத்தகத்தில் இடம்பெற வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டது. அவர்கள் அனைவருக்கும் ஆரணி நன்றி தெரிவித்து உரையாற்றினார்.






# TBC Toronto Business College

கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

படிக்க கொஞ்ச நேரம் ஒதுக்குங்க கை நிறைய சம்பாதிங்க



**JOB READY PROGRAMS**

**ACCOUNTING & PAYROLL ADMIN.**
35 Weeks
Jobs available in plenty
Earn good salary
Co-op Available

**COMPUTERIZED ACCOUNTING**
26 Weeks

**PERSONAL SUPPORT WORKER(PSW)**
28 Weeks

**FOOD SERVICE WORKER (FSW)**
12 Weeks

**MEDICAL OFFICE ADMIN.(MOA)**
32 Weeks

**BUSINESS ADMINISTRATION**
26 Weeks

**SECOND CAREER**

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்

Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more

**PART TIME COURSES**

*Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting & Accpac 2012*

**Workshops**

Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

**416- 451- 6680 / 416-291-5155**

**4465 Sheppard Ave. East #208**
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# தோல்வியில் இருந்து மீண்டு வருவோம்!

## பேட்டி பிரேமலதா விஜயகாந்த்

"நான் பள்ளிக்கூடம் படிக்கும்போதே பேச்சுப்போட்டி, பட்டிமன்றம், விளையாட்டு என எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொண்டு நிறையப் பரிசுகளை வாங்கி யிருக்கிறேன். தடகளப் போட்டியில் நானும் எனது அக்கா ராதாவும் தேசிய விளையாட்டு வீரர்கள். எங்கள் அப்பா கண்ணய்யா சர்க்கரை ஆலையில் மேலாளரா இருந்தார். இதனால், போட்டிகள் ஆரம்பித்து நாங்கள் மைதானத்துக்குள் நுழைந்ததுமே, "சர்க்கரை ஆலை சகோதரிகள் வந்துவிட்டார்கள் இவர்களிடம் வெற்றிபெற முடியாது" என்று சக வீரர்கள் மிரள்வார்கள். அந்த வயதுப் பழக்கம், அது கொடுத்த தைரியம் ஆகியவற்றால்தான் இப்போது அரசியல் மைதானத்தில் உறுதியுடன் ஆட முடிகிறது." நம்பிக்கையுடன் பேசுகிறார் பிரேமலதா விஜயகாந்த்.

சமீபத்தில் வெளியேறியவர்கள் வைத்துள்ளார்களே?

நான் இன்று நேற்று அரசியலுக்கு வந்தவள் அல்ல. தேமுதிக கட்சி ஆரம்பித்து 11 வருடங்கள் ஆகின்றன. ஆனால், தேமுதிக வின் அஸ்திவாரமான கப்டன் ரசிகர் மன்றங்கள் 30 ஆண்டு காலமாக செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. ரசிகர் மன்ற காலத்தில் இருந்தே நான் இதில் செயல் பட்டுக் கொண்டிருக்கிறேன். எங்களுக்கு 1990இல் திருமணம் நடைபெற்றது. ஆரம்பத்தில் குடும்பம், குழந்தைகள், அவர்களது படிப்பு என்று கவனம் செலுத்திக் கொண்டிருந்தேன். ஆனால், அப்போதும் ஒரு இல்லத்தரசியாய் மட்டுமில்லாமல் ரசிகர் மன்றத்தைக் கவனிக்கும் பணி, கப்டனுக் காகக் கதைகள் கேட்கும் பணிகள் என்று கப்டனோடு இணைந்து பணியாற்றிக்



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பரபரப்பு களில் சூறாவளியாக வலம்வந்தவர், தேர்தல் தோல்விக்குப் பிறகு சிறு இடைவெளி எடுத்துக்கொண்டு, இப்போது மீண்டும் பரபரப்பு அரசியலுக்குத் தயாராகிவிட்டார். அவரக்குறிச்சி, தஞ்சாவூர், திருப்பரங்குன்றம் இடைத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல் கள், தேமுதிகவின் 12ஆவது ஆண்டுவிழா என அடுத்தடுத்து வருபவற்றுக்காக கட்சியைத் தயார் செய்ய ஆரம்பித்து விட்டார். தேமுதிக மாவட்ட செயலாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றிய செயலாளர்கள், கிளை செயலாளர்கள் என கட்சி நிர்வாகிகளை தினமும் சந்தித்து ஆலோசனைகள் கேட்கிறார் ஆலோசனைகள் கூறுகிறார். இத்தனை பரபரப்புக்கும் இடையே நமக்கும் சிறிது நேரம் ஒதுக்கினார்.

உங்கள் ஆலோசனைகளின்படிதான் விஜய காந்த் முடிவுகள் எடுக்கிறார். தேமுதிகவிலும் குடும்ப ஆதிக்கம்தான் நிலவுகிறது விஜய காந்தும் வாரிசு அரசியல் செய்கிறார் என்ற விமர்சனத்தை தேமுதிகவில் இருந்து

கொண்டுதான் இருந்தேன். விவசாயம், கல்வி, வேலைவாய்ப்பு என எல்லாவற்றி லுமே தமிழகம் பின்தங்கி இருப்பதைப் பார்த்து எனக்கு எப்போதும் ஒரு ஆதங்கம் இருந்து கொண்டிருந்தது. அதுதான் என்னை யும் அரசியலுக்கு அழைத்து வந்தது. 2006இல் முதன்முதலாக விருத்தாசலம் தொகுதியில் கப்டன் வேட்பாளராக போட்டி யிட்ட போது, ஒரு மாதம் அங்கேயே தங்கி மக்களைச் சந்தித்து தீவிர பிரச்சாரம் செய்தேன். அதிலிருந்துதான் என்னுடைய அரசியல் பணி துவங்கியது. அதேநேரம் பசங்களும் வளர்ந்துவிட்டார்கள் என்பதால் முழுக்க அரசியலில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டேன்.

சட்டமன்றத் தேர்தலில் தேமுதிக கூட்டணிக் காக திமுக பல்வேறு முயற்சிகளை எடுத்தது. துணை முதல்வர் பதவி தருவதற்குக்கூட தரத் தயாராக இருந்தார்கள். ஆனால், நீங்கள்தான் மக்கள் நலக் கூட்டணியுடன் செல்லும் முடிவை

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# வாழ்க்கைப் பயணங்கள் - 23

## தொடர்கதை.........

அமலாவுக்கு இப்போதெல்லாம் நேரம் போவதே தெரிவதில்லை. வேலை நாட்களில் வேலையால் வந்து சமையல், வேலை பற்றிய மேலதிக தயார்படுத்தல், அப்பா, அம்மாவுக்குத் தொலைபேசி, நண்பி சுகந்தியுடன் உரையாடல் என்றளவில் இருந்து கொண்ட அமலாவுக்கு அரவிந்த் உடனான நட்பு, கிடைக்கும் மிகுதி நேரம் எல்லாத்தையும் திமிங்கிலாய் விழுங்கி விட்டது.

**Create Your Dream Home. We offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST**



சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்

M.BASKARASINGHAM, P.Eng.
MEGHAL RAVAL, M.Sc (Eng)
CHARLES AARON JAYAKAR, B.Arch JOON PARK, M.Sc(Eng)
416 332 1743 www.buildingexpertscanada.com

# வாழும்போதே வாழ்த்துவோம்

# கனேடிய அன்னை (தெரேசா)

பிரெட் கப்புச்சினோ Fred Cappuccino அவர்களுக்கு இப்பொழுது 90 வயது. அவரது மனைவி பொனி கப்புச்சினோ Bonnie Cappuccino அவர்களுக்கு 81 வயது. மோசமான உடல்நிலையில் இருந்த போதிலும், இந்தக் கனேடிய ஜோடி இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், சீனா மற்றும் திபெத் ஆகிய நான்கு நாடுகளில் 1500 ஏழை அநாதரவான குழந்தைகளையும் 200 அநாதரவான பெண்களையும் பராமரித்துக் கொள்ளும் தங்கள் பணியை இடைவிடாது செய்து கொண்டிருக்கின்றார்கள். இப்பணியை செய்வதற்கு இவர்களுக்கு ஊன்றுகோலாக அமைந்தது அவர்களது ஆரம்ப வாழ்க்கையில் அவர்கள் தேர்ந்தெடுத்த தொழில்கள் மற்றும் அவர்களைக் கவர்ந்த மகாத்மா காந்தியின் இலட்சியங்கள்.



21 பிள்ளைகளுடன் அவர்கள் குடும்பம்

**- சுந்தரம் இந்திரராஜா -**

பிரெட் கப்புச்சினோ, ஒரு மெத்தடிஸ்ட் கிறிஸ்தவ போதகர். பொனி மக்குலுங் Bonnie McClung அழகிய பெண்மணி. ஒரு தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் பொனி மாணவியாக இருந்தபோது அவரைக் காதலித்து பின்னர் மணமுடித்து தங்கள் வாழ்க்கைப் பயணத்தை ஒன்றாக, 1953 இல் தொடங்கினார்கள். உலகம் முழுவதும் மக்கள் வறுமையால் தங்களது குழந்தைகளை சரியாகக் கவனிக்க முடியாமல் இருக்கிறார்கள். சில நாடுகளில் இடம்பெறும் சர்வாதிகார ஆட்சிமுறைகளாலும் உள்நாட்டு இனக்கலவரங்களாலும் சிறுபான்மையினத்தவர்கள் நசுக்கப்படும் போது ஒன்றும் அறியாத குழந்தைகள்தான் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வோடிருந்தார்கள்.

நாங்கள் வறிய நாடொன்றிலிருந்து குழந்தை ஒன்றைத் தத்தெடுத்து வளர்க்கலாம் என்ற தனது விருப்பத்தை பொனி ஒரு தடவை கணவன் பிரெட் இடம் வெளிப்படுத்தினார். அதனை அவரும் அங்கீகரித்தது மட்டுமல்ல இரு குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கலாமே என்றார். பொனிக்கு இரட்டிப்புச் சந்தோசம்.

அமெரிக்க கறுப்பு இன இராணுவ வீரர் ஒருவர் ஜப்பானில் கடமையில் இருந்த காலத்தில் ஜப்பானியப் பெண்ணுடனான தொடர்பால் 1954ஆம் ஆண்டு அவர்களுக்குப் பிறந்த ஆண்பிள்ளை கலப்பு நிறமாக இருந்ததால் ஜப்பானியர்கள் தங்கள் சமுதாயத்தில் ஏற்க மறுத்து குழந்தைகள் காப்பகத்தில் விட்டுள்ளார். அங்கிருந்து ஏஜென்சி மூலம் இந்தக் கலப்பு இன அனாதைக் குழந்தையை முதலாவதாக பிரெட்–பொனி தம்பதியினர் தத்தெடுத்தனர். அவனுக்கு றொபின் கூட் Robin Hood எனப் பெயரிட்டனர். சில வாரங்களுக்குள் கறுப்பு இன இன்னொரு பிரகாசமான 5 வயதுப் பெண் குழந்தை மசிகோவைத் (Machiko) தத்தெடுத்தனர். தத்தெடுத்த குழந்தைகளால் அவர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவியது போலும் தத்தெடுப்பதை இன்னும் ஒன்று, இன்னும் ஒன்று என்று கூட்டிக் கொண்டிருந்தார் பொனி.

நிறப் பிள்ளைகளைத் தத்தெடுப்பது அவரது மெத்தடிஸ்ட் கிறிஸ்தவ மதப்பிரிவினருக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. பல நெருக்கடிகளைக் கொடுத்தும் அவர் தனது நிறப் பிள்ளைகளைத் தத்தெடுக்கும் செயலை நிறுத்துவதாக இல்லை. மற்றொரு கறுப்பு நிற வில்லியம் (William) என்ற ஆண் பிள்ளையைத் தத்தெடுத்தது பற்றி

தொடர்ச்சி 40ஆம் பக்கம்



Math tutorial 328

Answers to tutorial 327

1)In MISSISSIPPI we have one M,four Is ,four Ss ,and two P,If the M is placed in the middle position ,there must be five letters before it of which 2 are I ,two are S , and one is P.This can be done in $\frac{5!}{2!2!!}$=30 ways.The last five must be in the reverse order of these.There are 30 palindromes

2) The number of possible last 3 symbols in a password is $62^3$.There fore it takes$62^3$x20 seconds or 1324 hours

3)Therefore (0,8)=m(2,4)+n(-2,1) equating components 2m-2n=8 and 4m+n=8 , solving these two equations m=8/5,n=8/5 so (0,8)=8/5(2,4) +8/5(-2,1)

4)Since the x intercepts are -3,0,and2 the family of cubic function is f(x)=k(x)(x-2)(x+3)

(b)If (-1,12) lies on the graph then k=2 so the particular family is f(x)=2x(x-2)(x+3)

QUESTIONS TUTORIAL 328

1)In what point does the plane $\vec{r}$=(6,-4,3)+s(-2,4,7)+t(-7,6,-3) intersect the x-axis?

2)Find the point of intersection of the plane3x-2y+7z-31=0 with the line passes thro the origin and is perpendicular to the plane?

3)How many arrangements of six $A_s$ ,four $B_s$, and three $C_s$ can be formed if at least one C occurs before the first A, and at least one A occurs before the first B?

4)A steel cube is uniformly coated with ice .The volume of the ice is given by $y=8x^3+36x^2+54x$ where x is the thickness of the ice .Find the thickness of the ice when its volume is $2170cm^3$?

By Mr.S.F.Xavier (Teacher)

Tel6473409490/4167322228

# திறப்பு விழா *URGENT CARE CENTRE*!

மார்க்கம் மாநகரில் மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகாமையில் உள்ள MED-CENTRE, URGENT CARE SERVICE சிகிச்சை நிலையத்தில் புதிதாக URGENT CARE CENTRE பிரிவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. வைத்தியர்கள், வைத்திய சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் மத்தியில் லண்டனில் இருந்து வருகை தந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் செந்தில்மோகனின் சகோதரி விஞ்ஞானி திருமதி. செந்தில்ராஜா, டாக்டர் சுகந்தி ரவீந்திரன், டாக்டர் சுபாஷினி செந்தில் மோகன் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.





2013ஆம் ஆண்டு சகல வசதிகளும் கொண்ட இரண்டாவது சிகிச்சை நிலையத்தை மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகாமையில் ஆரம்பித்ததாகவும், இங்கு "எக்ஸ்றே" வசதி, பற் சிகிச்சை வசதி, மருந்தகம் ஆகிய சகல வசதிகளும் உள்ளன. அத்துடன் இன்று அவசர சிகிச்சை பிரிவும் ஆரம்பிக்கப்படுகின்றது. அதற்கு முன் முதலாவது சிகிச்சை நிலையத்தை பிறிம்ளி வீதியில் ஆரம்பித்ததாகவும் மேற்படி நிறுவனத்தின் ஸ்தாபகரான டாக்டர் செந்தில் மோகன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அப்போது முதல் டாக்டர் சுகந்தி பகீரதி தம்முடன் இணைந்து கொண்டு சிறந்த சேவையாற்றி வருவதாக வும் அதேபோன்று இவ்விரு நிலையங்களி லும் சிறந்த சேவை யாற்றி வரும் வைத்தியர் கள், வைத்திய சேவை நிபுணர்கள் ஆகிய அனைவருக்கும் தனது நன்றியையும், பாராட்டினையும் தெரி வித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திறப்பு விழாவிற்கு முன்னதாக மேற்படி சிகிச்சை நிலையத்தின் அண்மையிலுள்ள "மார்க்கம் கொன்வென்சன்" நிலையத்தில் வரவேற்பு வைபவம் இடம்பெற்றது. ஸ்காபுறோ றூஜ் றிவர் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் என்.டி.பி.கட்சி வேட்பாளரான திரு.நீதன் சானும் சிறப்பு விருந்தினராக இவ்வைபவத்தில் கலந்து கொண்டிருந்தார். ஊடகவியலாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், பொதுமக்கள் வருகை தந்திருந்தனர். அதனையடுத்து MEDCENTRE நிலையத்தில் சிறந்த சேவையாற்றி வரும் டாக்டர்கள், தாதிகள் மற்றும் அலுவலகர்கள் அனைவரையும் டாக்டர் செந்தில்மோகன் பாராட்டி, மலர்ச் செண்டுகளும், விருதுகளும் வழங்கி கௌரவித்தார்.

இவ்வைபவத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டியும் உணவும் பரி-மாறப்பட்டது. அப்போது நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது. அதன் பின்னர் பிற்பகல் புதிய URGENT CARE CENTRE அலுவலகம் பார்வையாளர்களின் பலத்த கரகோஷங் களுக்கு மத்தியில் கோலா கலமாக திறந்து வைக்கப்பட்டது.

- வீரகேசரி மூர்த்தி -


# CUSTOM BUILD HOME

## Build Your Personalized Dream Home

## Starting From $139 / sq ft

## Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான,
தரமான கட்டிட நிபுணர்கள்

## Industrial Buildings from $75 / sq ft

**TAMB CANADA** (647) 877-8262 (TAMB)

# EDUCATION

## Review Questions16-16

### ➢ CHEMISTRY 12

A 28.0 g of gaseous hydrogen chloride is allowed to react with a 30g sample that contains 90% potassium dichromate. Assume that other substances in the sample not reacting with hydrogen chloride. Write the chemical reaction between hydrogen chloride and potassium dichromate, and determine the amount of chlorine gas produced in this reaction.

### ➢ ADVANCED FUNCTION 12

(i) Determine the leading coefficient of a polynomial function with the 3rd difference 3.

(ii) Determine an equation of a 4th degree polynomial function with zeros 1,2 of order 1 and 3 of order 2 passing through (4, 18).

(iii) $f(x) = ax^3 + bx^2 + cx + d$ which has the following properties

(a) Remainder -7 when divided by $(x-1)$

(b) Same remainder when divided by $(x-2)\&(x+2)$

(c) one of the factor $x$ and the graph passes through (-1,17)

Determine the equation of the polynomial.

### ➢ CALCULUS 12

Find the limits of the following,

(i) $\lim_{x\to 0} \frac{2x^2+3x+5}{5x^2+3x+2}$

(ii) $\lim_{h\to -4} \left( \frac{\frac{1}{4} + \frac{1}{h}}{4+h} \right)$

(iii) $\lim_{x\to 1} \frac{x^6-1}{x^{10}-1}$

(iv) $\lim_{x\to 2} \frac{x+2}{x^3+8}$ (v) $\lim_{x\to -1} \frac{x^2+x-5}{x+1}$

(vi) $\lim_{x\to -3} \left( \frac{3x^3-4x+3x^2-12}{x^2-9} \right)$

## Answer Key : 16-15

### ➢ Physics 11& 12

(11) For the 2nd one, $v_1 = 0$, $v_2 = 12.0m/s$, $a = 9.8m/s^2$

$$t = \frac{12 - 19.6}{9.8} = 2s$$

First ball , t = 4s

Therefore distance fall $\Delta d = v_1t + ½ at^2$

$\Delta d_1 = 0 + ½ \times 9.8 \times 4^2 = 78.4m$

Second ball , t = 2s

Therefore distance fall $\Delta d = v_1t + ½ at^2$

$\Delta d_2 = 0 + ½ \times 9.8 \times 2^2 = 19.6m$

(ans=78.4m -19.6m = 58.8m)

(12)




For vertical motion (up) use kinematic equation.

$\Delta d = v_1t + ½ at^2$

$\Delta d = -160m$; $a = -9.8m/s^2$; $v_1 = 0$ m/s; find t;

t = 5.7s.

$V_x$ = 180x1000/ 3600 m,

For the horizontal motion use

$\Delta d = v_xt = 28.5m$

### ➢ CHEMISTRY 11

At 20°C , in 10 ml of water 3g of $KNO_3$ and 0.8g of $NaHCO_3$ will only be dissolved.

If you add, 10ml of water into the mixture, the whole amount of (3g) of $KNO_3$ will be dissolved and (17.2-0.8)g of $NaHCO_3$ will not dissolve in it.

Separate the $NaHCO_3$ by filtration.

Answer key
16-16 - next issue
☎ 647 341 3975
*Dr. K.A. Srikrishnaraj*

KEEN TUTORING CENTRE

# உரித்துரியவர்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

***Unclaimed Balance Services***
***Bank of Canada***
***234, Laurier Ave. West***
***Ottawa, ON***
***K1A 0G9***
***Fax - 613-782-7713***

பணத்தினை வெளியே எடுப்பதற்காக கோருபவர்களை இங்கு பின்வரும் மூன்று பிரிவுகளுக்குள் உள்ளடக்கலாம்.

1. பணத்தினை பெற உரித்துடையவரே நேரடியாக கைச்சாத்திட்டு பணம் பெறுதல். (Individual) இந்த நிலைமையில் இருப்பவருக்கு பாரிய சட்ட பிரச்சினைகள் இருக்கமாட்டாது.

குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை இணையத்தளத்திலிருந்து எடுத்து நிரப்பி, எந்த வங்கிக் கிளையில் பணம் இருந்ததோ 'அந்தக் கிளை வங்கி அதிகாரியின் அங்கீகாரத்துடன் தமது அடையாளங்களை நிரூபித்து இலகுவாக பணத்தினை மீளப் பெறலாம்.

2. பணத்தினை பெற உரித்துடையவர் மரணமாகியிருந்தால் வாரிசுகள் பெறுதல். (To Make Estate Claim)

இப்படியான நிலைமையே பலருக்கும் இந்த பணத்தினை மீளப்பெறுவதில் அனேகமாக ஏற்படுவது வழமையாகும். அதாவது மரணமாகிய ஒருவரின் பெயரில் பணம் இருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்திய பின்பு இணையத்தள மின் அஞ்சல் மூலமாக தங்களை பற்றிய விபரங்களை மத்திய வங்கிக்கு முதலில் அனுப்புதல் வேண்டும். (Submit your contact details) வாரிசுகள் பணம் பெறுவதற்குரிய விண்ணப்ப படிவங்களை விபரங்களுடன் அனுப்பி வைப்பார்கள்.

பணம் பெற உரித்துடையவர் என்பது 'மரணசாசன பத்திரம்' (Last will & Testament) மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும். இப்பத்திரம் இல்லாதவர்கள் வாரிசு என்பது நீதிமன்ற ஆணை மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். அத்துடன் பணத்தின் உரிமையாளர் உயிருடன் இல்லை என்பது 'மரண சான்றிதழ்' (Death Certificate) மூலம் நிரூபிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுகளாக இருந்தால் சமனாக பகிர்ந்து வழங்கப்படும்.

3. **குறிப்பிட்ட சில நிறுவனங்களின் பணமாக இருந்தால் நிறுவனமே கோருவது.** (To Make a Corporate Claim)

முதலில் இணையத்தள மின் அஞ்சல் மூலமாக தகவல்களை அனுப்பி விண்ணப்ப படிவங்கள் விபரங்களை பெற வேண்டும். நிறுவனத்தின் அத்தாட்சிகளுடன் சம்பந்தபட்ட அதிகாரியின் அடையாளங்கள் அதிகாரங்களை குறிப்பிட்டு பணத்தினை மீள பெற முயற்சிக்க வேண்டும்.

**பணத்துக்குரியவருடன் கனேடிய மத்தியவங்கி தொடர்பு கொண்டு தகவலை அறிவிக்குமா?**

ஒவ்வொருவர் பெயரிலும் கோரப்படாத பணம் கணக்கில் உள்ளது என்ற தகவலை எந்த சந்தர்ப்பத்திலும் மத்திய வங்கி அவரவரை தேடி அறிவிக்காது.

பணம் பெற உரித்துடையவர்கள் பெயர், கடைசியாக பதிவில் உள்ள விலாசம், இறுதியாகக் கணக்கில் பரிமாற்றம் மேற்கொண்ட திகதி (Last Transection) கணக்கு வைத்திருந்த வங்கியின் விபரம், கோரப்படாத பணத்தின் தொகை என்பனவற்றினை அவரவராக இணையத் தளத்தினூடாக அல்லது தமது வங்கிக் கிளையினூடாக தேடி அறிந்து பணத்தினை வெளியே எடுப்பதற்கு மனு செய்ய வேண்டும்.

**எவ்வளவு காலம் கனேடிய மத்திய வங்கி இதனைக் கோருபவர்களுக்கு வழங்கத் தயாராக கணக்கில் வைத்திருப்பார்கள்?**

$1000 டொலர்களுக்கு கீழே என்றால் 30 வருடங்கள். $1000 டொலருக்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் 100 வருடங்கள்

**இந்த பணத்தினை பெற ஏதாவது செலவு ஏற்படுமா?**

இதனை தேடிப் பார்ப்பதற்கும் மீளப் பெறுவதற்கும் எதுவிதமான செலவுமில்லை. ஆனால் ஆதாரங்கள் மூலம் நிரூபிப்பதற்கு சட்டரீதியான ஆவணங்கள் ஏதாவது பெறவேண்டிய நிலைமை வருமானால் அதற்கு செலவுகள் உருவாகலாம்.

**பணத்தினை மீளப் பெறுவதில் எவ்வளவு காலம் எடுக்கும்?**

பத்திரங்களை ஒழுங்காக சமர்ப்பித்தால் 10-12 கிழமைக்குள் பணத்தினைப் பெற்று விடலாம்.

இறுதியாக வாசகர்களுக்கு ஒரு கோரிக்கை! எங்கேயாவது உங்கள் பணம் தவறவிடப்பட்டதா? என்பதனை காலம் தாழ்த்தாது பரிசீலனை செய்து பாருங்கள்!




# தோல்வியில்…

25ஆம் பக்கத்தொடர்ச்சி

எடுத்ததாக சொல்லப்படுவது பற்றி?

நான் தேமுதிகவின் அடிப்படை உறுப்பின ராக மட்டுமே இருக்கிறேன். மகளிர் அணித் தலைவிகூட கிடையாது. சிவகாமி என்பவர் தான் எங்கள் கட்சியின் மகளிர் அணித் தலைவி. இந்தக் கட்சி என்பது கட்டனுடை யது. அவருடைய இலட்சக் கணக்கான தொண்டர்களுடையது. கப்டன் படம் ரிலீஸாகும் காலங்களிலேயே டிரைவர், வாட்ச்மேன், சமையல்காரர்கள் எல்லோரை யும் பார்த்து, "ஏம்பா… எம் படம் எப்படியிருக்கு?"ன்னு கருத்துக் கேட்பவர். அதுபோல் இப்போதும் எந்த முடிவையும் தொண்டர்களுடைய கருத்தறிந்துதான் கப்டன் எடுப்பார். தாய்க்குப் பின் தார மென்று சொல்வார்கள். அந்த வகையில் தொண்டர்களிடம் கருத்துக் கேட்பது மாதிரி என்னிடமும் கேட்பார். எல்லோர் கருத்தை யும் கேட்டாலும் இறுதி முடிவை கப்டன் தான் எடுப்பார். அவருடைய முடிவில் நான் உட்பட யாருமே தலையிட முடியாது.

தற்போது சட்டசபையில் திமுக பலமான எதிர்க்கட்சியாக அமர்ந்துள்ளது. திமுகவு டன் கூட்டணி வைத்திருந்தால் வெற்றி பெற்றிருக்கலாமே என்று இப்போது நினைக்கவில்லையா?

நிச்சயமாக இல்லை. தேமுதிக ஆரம்பிக்கப் பட்டதன் நோக்கமே திமுக, அதிமுக இரண்டு கட்சிகளுக்கும் மாற்றாக தமிழ் நாட்டில் ஒரு பெரிய அரசியல் கட்சியாக வரவேண்டும் என்பதுதான். ஆனாலும், 2011இல் அதிமுகவுடன் ஏன் கூட்டணி வைத்தோம் என்றால், அப்போது திமுக மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகி, அவர்களைப் பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்ற கோபமும் எதிர்ப்பும் மக்கள் மத்தியில் அதிகமாக இருந்தது. அந்த மக்கள் உணர்வுக்கு மதிப்பளிக்கவும், திமுக ஊழல் ஆட்சியை மறுபடியும் வராமல் தடுக்கவும்தான் அதிமுகவுடன் கூட்டணி வைத்தோம். விரைவிலேயே அது தவறான முடிவு என்பதை உணர்ந்தோம். அப்போதே இனிமேல் அதுபோன்ற தவறைச் செய்யக்கூடாது என முடிவு எடுத்துக் கொண்டோம்.

திமுகவுடன் கூட்டணி சேராமல் இருக்க பணம் வாங்கிவிட்டீர்கள் என்று வைக்கப் படும் குற்றச்சாட்டு பற்றி?

கப்டன் நடித்து, கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில்தான் இதுவரைக்கும் கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். யாரிடமும் ஒரு பைசா கைநீட்டி வாங்கினதில்லை. சென்ற தேர்தலோடு தேமுதிக அழிந்தது. இனிமேல் மீண்டு வரமுடியாது என்கிறார் களே உங்கள் பதில் என்ன?

எங்கள் கட்சி அழிந்து போகவேண்டும் என்று நினைக்கிறவர்கள்தான் அப்படிச் சொல்கிறார்கள். அவர்கள் எண்ணம் நிறைவேறாது. 1996 சட்டமன்றத்தேர்தலில் முதல்வர் வேட்பாளராக நின்ற ஜெயலலிதா பர்கூர் தொகுதியில் தோல்வியடைந்தார். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் அதிமுக படுதோல்வி அடைந்தது. ஏன் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே தி.மு.க. அனைத்துத் தொகுதி யிலும் தோல்வியடையவில்லையா? அவர்கள் எல்லாம் அழிந்தாவிட்டார்கள். வெற்றித் தோல்வி என்பது அரசியலில்



**- சிவதாணு -**

சகஜமான ஒன்று. அது நிரந்தரம் கிடை யாது. எங்களின் வெற்றி இலக்கை நோக்கி நாங்கள் நகர்ந்துகொண்டுதான் இருக்கி றோம். தே.மு.தி.கவின் பலம் என்னவென்று எங்களுக்குத் தெரியும். அதை எப்படிக் கொண்டுசெல்ல வேண்டுமென்றும் தெரியும்.

தேர்தல் பரப்புரைகளில் உங்கள் பேச்சுத் தான் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. உங்களது பேச்சுத் திறமையை எப்படி வளர்த்துக் கொண்டீர்கள்?

பொதுவாகப் பிரச்சாரம் தொடங்கிவிட்டாலே ஐஸ்க்ரீம், குளிர்ந்த குடிநீர் எனக் குளிர்ந்த உணவுகளுக்குத் தடை போட்டுவிடுவேன். நமது நாடு, நமது மக்கள் எப்படியிருக்க வேண்டும் என்ற என் ஆசையும் ஆதங்கமும் உயர்ந்த நோக்கமும் உறுதியும்தான் சிறப்பான பேச்சாக வெளிப்படுகிறது. ஓர் ஊருக்குப் பேசப் போகும்போது அந்த ஊர் மக்களின் அடிப்படைப் பிரச்சனை களிலிருந்து அத்தனை பிரச்சனைகளையும் பற்றி நானே ஆய்வு செய்து என் பேச்சைத் தயார் செய்வேன். மற்றவர்கள் மாதிரி எழுதிக் கொடுப்பதை அப்படியே படிக்கிற தலைவர் நானில்லை.

அரசியலில் உங்களுக்கு விருப்பமான தலைவர் யார்?

கப்டன்தான். கட்சி ஆரம்பித்து 11 வருடத்தில் எவ்வளவோ நெருக்கடிகள், பிரச்சனைகள் வந்தது. அதை எல்லாம் தொண்டர்களின் பலத்தோடு தூள் தூளாக்கினவர் கப்டன். மேலும் காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகிய முன்னாள் தலைவர்களும் இன்றை அரசியல்வாதிக ளில் ஒபாமா, மோடியும் எனக்குப் பிடித்த தலைவர்கள்.

உங்கள் அரசியல் வாழ்க்கையில் கிடைத்த மறக்கமுடியாத பாராட்டு?

முதல் வெற்றி என்பது முதல் காதல், முதல் குழந்தை போன்றது. அந்தவகையில் விருத்தாசலம் தொகுதியில் கப்டனின் முதல் வெற்றியே எங்களுக்கு மிக முக்கிய மானது. அந்தத் தேர்தலில் நான் களப்பணி யாற்றியதைப் பார்த்து கப்டன் நிறையவே பாராட்டினார். அதற்குப் பிறகு, எத்தனையோ வெற்றிகளைப்பெற நான் உழைத்தாலும் அந்த முதல் வெற்றியைத்தான் இப்போதும் பாராட்டுவார் கப்டன். எனவே அதை என்னால் மறக்கவே முடியாது.

அதுபோல இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற விழாவும் என்னால் மறக்க முடியாதது. அந்த விழாவை உலகமே பார்த்துக் கொண்டிருந்தது. அந்த மேடையில் மோடி என்னையும் கப்டனை மட்டும் தனியாக அழைத்துப் பாராட்டியது பெருமிதமாக இருந்தது. அந்த நாடாளு மன்றத் தேர்தலில் மோடியைத் தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் கிராமம் கிராமமாகக் கொண்டுபோய்ச் சேர்த்தது கப்டன்தான்.

நரேந்திர மோடியின் இரண்டாண்டு ஆட்சி பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?

நன்றாகப் பேசுகிறார், நிறையச் சொல்கிறார். ஆனால் செயல்பாடுகள் குறைவாகத்தான் இருக்கிறது. உலகம் முழுக்க அவர் சுற்றுப்பயணம் செல்வது நல்லதுதான். ஆனால் செயல்பாடு வேண்டுமே. காஸ் சிலிண்டர்களுக்கு மானியம் வழங்குவது, அனைவருக்கும் வங்கிக் கணக்கு ஆரம்பித்தது போன்றவற்றை தவிர பெரிய-தாக எதுவும் செய்யவில்லை.

அரசியல் தவிர்த்து உங்களது தினசரி வாழ்க்கை எப்படிச் சென்று கொண்டிருக் கிறது? உங்கள் பொழுதுபோக்கு என்ன?

தினமும் காலையில் உடற்பயிற்சிகளும் யோகாவும் தவறாமல் செய்துவிடுவேன். எல்லாப் பத்திரிகைகளையும் தவறாமல் படித்து அன்றைய செய்திகளைத் தெரிந்து கொள்வேன். மேலும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் தொலைக்காட்சிச் செய்தி களைப் பார்ப்பேன். எங்கள் மகன் இப்போது சினிமாவில் நடிக்கிறான். அவனுக்காகக் கதைகள் கேட்பேன். எங்கள் ஆண்டாள் அழகர் கல்லூரிக்குச் சென்று நிர்வாகப் பணிகளைக் கவனிப்பேன். குறிப்பாக, கல்லூரியில் நடக்கும் விளையாட்டு நாள் விழாக்களில் தவறாமல் கலந்துகொள்வேன். சிலநேரம் நானும் களத்தில் இறங்கி மாணவிகளுடன் விளையாடுவேன். பொழுது போக்கப் புத்தகங்கள் வாசிப்பேன். சிங்கப்பூர், சீன வரலாற்று முன்னேற்றப் புத்தகங்களும் அப்துல்கலாம் புத்தகங் களும் எனக்கு விருப்பமானவை. ஓய்வு நேரத்தில் பாடல்கள் கேட்பேன். குறிப்பாக இளையராஜா, ஏ.ஆர் ரஹ்மான் பாடல்களை விரும்பிக் கேட்பேன்.

சமையல் செய்வது எனக்குப் பிடிக்கும். கப்டன் சினிமாவில் நடித்துக் கொண்டிருக் கும்போது, கப்டனுக்கு மட்டுமல்லாமல் 20 – 25 பேர் சாப்பிடுவது போல், சமையல் செய்து படப்பிடிப்பு நடைபெறும் இடங் களுக்கு எடுத்துக்கொண்டு போவேன். இப்போதும், அதே மாதிரிதான் எங்கள் வீட்டில் வேலை செய்கிற 20க்கும் மேற்பட் டோருக்குத் தினமும் நான்தான் சமைத்துக் கொடுக்கிறேன். தேர்தல் நேரச் சுற்றுப் பயணங்களின் போது மட்டும் இது தவறும். என்னுடைய சமையலில் கப்டனுக்கும் பசங்களுக்கும் பிரியாணியும் சிக்கன் கிரேவியும் ரொம்பப் பிடிக்கும். அவ்வப் போது செய்துகொடுத்து அசத்துவேன். பொதுவாக ஐஸ்கிரீம் என்றால் எல்லா வீடுகளிலும் கடையில்தான் வாங்கசி சாப்பிடுவார்கள். ஆனால், நான் ஐஸ்கிரீமி லேயே புதுப்புது வகைகளைத் தெரிந்து நானே செய்து எல்லோருக்கும் கொடுப்பேன். நேரம் கிடைக்கும்போது குடும்பத்தோடு தியேட்டருக்குப் போய் படம் பார்ப்போம்.

கப்டன் நடித்த படங்களில் உங்களுக்குப் பிடித்தப் படம் எது?

அவருடைய எல்லாப் படங்களுமே பிடிக்கும். ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் ரமணா, கப்டன் பிரபாகரன், வல்லரசு ஆகிய படங்களைச் சொல்வேன்.

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா அறிவித்தல்
கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல்
காலம்: 21-08-2016 (ஞாயிற்றுக்கிழமை) நேரம் --- காலை 11.00 மணி
இடம்: மில்லீக்கன் பூங்கா ஸ்காபுரோ ( ஸ்ரீல்ஸ் / மக்கோவன் )
விளையாட்டுப்போட்டிகளும், பரிசளிப்பும் மற்றும் பல நிகழ்வுகளும் வழமைபோல் இடம்பெறவுள்ளன.
கனடா வாழ் இணுவில் மக்களை அன்போடு அழைக்கிறோம்.
தொடர்புகளுக்கு: 416-496-9071 (செ. தளையசிங்கம்) 416-430-0422 (மு. கிருபாகரன்)
647-885-7407 (சோ. சிவநாயகம்)

## நகைச்சுவைத் தொடர் 339
# ராசம்மா ராச்சியம்
கலகலப்பு நீதன்



பாரதி அன்று சொன்னது.
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தடை செய்யப்பட்டது.
கப்பலோட்டிய தமிழன் படத்தில் பார்த்து ரசித்தது.
சிந்து நதியின்மிசை நிலவினிலே சேரநம் நாட்டிளம்
பெண்களுடனே
சுந்தரத்தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடிவருவோம்....



சிங்களத்தீ வினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.

இதில் பாரதியார் குறிப்பிடும் சிந்துநதி இமயமலையில் ஆரம்பித்து பாகிஸ்தான் ஊடாக அரபிக்கடலில் வீழ்கிறது.
இந்தப்பாடலைப் பாரதியார் இயற்றியபொழுது பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரியவில்லை.

தொலைநோக்கில் கவிஞர்கள் எழுதுவது பாடுவது காலம் செல்ல உண்மையாவதுண்டு. ஆனால் பாரதியின் சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம். குறிப்பிட்ட கால கட்டங்களில் ஒலிபரப்பத் தடை செய்யப்பட்டது.

ஆனால் கடந்த வாரம் இந்தோசீனியாவில் நடந்த மாநாடொன்றில் கலந்துகொண்ட இலங்கை மந்திரி அவர்கள் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பாலம் அமைப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

(ராமயணத்தின்படி ராம பக்தன் அனுமானும் அனுமாரின் படைகளும் தான் அணை கட்டினார்கள்) அதே படைகள் நாடாளுமன்றத்தில் தாராளமாக இருக்கிறார்களோ? (குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்)

லண்டன் வ்பிறிட்ஜ் வ்போலிங் டவுன் என்ற வரிகள் (பாடலாக) நினைவு வருகிறது.

இந்தியாவில் மும்பாய் கோவா செல்லும் பிரதான வீதியை இணைக்கும் ஆங்கிலேயர் கால பாலம் இடிந்து வீழ்ந்ததில் வீதியில் சென்றுகொண்டிருந்த பஸ் 20 பிரயாணிகளுடன் நீரில் மூழ்கியிருக்கிறது.
கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு



சவூதி அரேபியாவில் அண்மையில் விமானம் தீப்பற்றியது. தீவிர முயற்சியால் அனைத்துப் பிரயாணிகளும் காப்பாற்றப்பட்டனர். தீயணைப்புப் படை வீரர் இதில் மரணமானார்.

'மின்னுவதெல்லாம் பொன்னல்ல'
பெண்கள் கவரிங் நகைகளை அணிய வேண்டும். - வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் - செய்தி



நல்லூர் திருவிழா. இப்போ திருடர்கள் அதிகம். பெண்கள் கவரிங் நகைகளை அணிய வேண்டும் என்ற செய்தியைப் படித்துவிட்டு செக்கண்ட்புளோர் செல்லம்மா சிரிச்சா. ஆனால் சிரித்துக்கதைத்துக் கொண்டிருந்த ஐபொட் அகிலாண்டேஸ்வரியின் முகம் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் அடிவாங்கிய சசிகலா புஸ்பாவின் முகம்போல் இருண்டுவிட்டது. காரணம் ஐபொட் அகிலாண்டேஸ்வரி என்றும் அணிவது கவரிங் நகைகளே.
(எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியேகம்பனே!)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்! ஔவையார் என்றோ சொன்னது, என்றோ படித்தது.

இருந்தாலும் மக்கள் அதனைப்புரிவதாக இல்லை. அண்மையில் வட இந்தியாவில் வீதியில் பிச்சையெடுக்கும் முதியவர் இறந்துவிட்டார். அவருக்குப் பக்கத்தில் இருந்த மூட்டையை அதிகாரிகள் தேடுதல் செய்தபொழுது ஒருகோடி ரூபாய் பணம் இருந்ததாம்.
அவர் கடவுளிடம் போய்விட்டார்.
காசேதான் கடவுளடா!
அது பாடல் வரி. இந்தப்பணம் யாருக்கு சொந்தம்?

ஆண்டவனே உன் பாதங்களை கண்ணீரால் நீராட்டினேன். இது எம்.ஜி.ஆர் துப்பாக்கிச்சூடு பட்ட காலத்தில் ஒளிவிளக்கு படத்தில் பாடலாக மனதை நெகிளவைக்கும் பாடல் காட்சியாக வெளிவந்தது.



இறைவனை வேண்டி ஒருவரைக் காப்பாற்றச் சொல்லிக் கேட்கலாமா? எனப்பலர் கேலி செய்ததை உலகர் கேட்டிருக்கிறார். அதுவும் 1968 ஆம் ஆண்டு. ஆனால் 2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்றம் தேவாலய போதகர்களை தனக்காக ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்யும்படி கேட்டிருக்கிறார். கோட் ப்ளஸ் அமெரிக்கா (God Bless America) இந்தச் செய்தியைப் பார்த்ததும் உலகர் நீண்ட பெருமூச்சு விட்டார்.



ஆனால் ஐபொட் அகிலாண்டேஸ்வரி இளம் முன்னணி எழுத்தாளர் செல்வி ஆரணி ஞானநாயகனின் 'பாட்டி சுடாத வடை' எனும் புத்தகத்தை வாசித்து வாசித்து சிரித்துக்கொண்டா. சிறுவர்க்கேற்ற நீதிநூல். ஆரணி எழுதிய கதைகளில் 50 தெரிவுசெய்து அச்சேற்றி பாட்டி சுடாத கதை என வெளியிடப்பட்டது. நான் இனி ஆரன் சின்னப்பிள்ளைகளின் பிறந்தநாளுக்கு உந்தப்புத்தகம்தான் அன்பளிப்பாகக் கொடுக்கப்போறன் எனும்போது ஆட்டிலறி அன்னம்மா உலகரைப் பார்த்தா. உலகர் அதிகமாக பிறந்தநாளுக்கு புத்தகங்கள் அன்பளிப்பு செய்வது அனைவருக்கும் தெரியும்.



ஞாபகம் வருகிறதா? ஒகஸ்ற் 15...30

16. ராமகிருஸ்ண பரமஹம்சர் நினைவு தினம்.
(பெப்ரவரி 18, 1836 - ஆகஸ்ட் 16, 1886)
சுவாமி விவேகானந்தர் இவரிடம்தான் சீடராக இருந்தார். அனைத்த மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.



18. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம். (1945)

19. உலக புகைப்படநாள்



22. ஜாக் லெக்ரன் (Jack Jayton NDP) நினைவு தினம் 2011

31. இளவரசி டயானா நினைவு தினம் (1997)







# முகநூல் நட்பு -சிறுகதை

ரதி தன் முகநூலை திறந்து கடவுச் சொல்லை கொடுத்து விட்டு தனக்குள்ளேயே ஒரு தரம் சிரித்துக் கொண்டாள். "இன்று என்ன கவிதை என் இன்பக்ஸ் இல் (inbox) இருக்க போகுதோ" என்று ஒருகணம் நினைத்தாள். அவளுக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது. என்ன கிட்டதட்ட ஒரு மாதத்துக்கு மேல் இந்த மதன் எனக்கு மெசேஜ் பண்ணி கொண்டு இருக்கிறான். ஒவ்வொரு நாளும் தவறாது தொலைபேசி அழைப்பு வேறு.

அப்படியிருந்தும் இவள் ஒரு நாள் கூட அவன் அழைப்புக்கோ அல்லது அவன் கெஞ்சி விடும் மெசேஜ்களுக்கோ இவள் பதில் அனுப்பியதில்லை. அப்படியிருந்தும் இவன் இன்னமும் மனம் தளராமல் விடா முயற்சியின் உதாரணமாகவே திகழ்கிறானே என்று நினைத்து மீண்டும் சிரித்தாள்.

முகநூலும் திறந்து கொண்டது. வழமையாக குறுஞ்செய்தி கிடைக்கப் பெற்றதான அந்த சிவப்பு அறிகுறி இல்லாதது அவளுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. மீண்டும் அவள் இன்பாக்ஸ் செய்திகளை தட்டிப்பார்த்தாள். ம்ஹூம் மதனின் பழைய செய்திகள் தான் இருந்தன.

இன்று அவனிடமிருந்து ஒரு செய்தியும் வந்திருக்கவில்லை. தன் தோளை சிலிர்ப்பி விட்டு அன்று தன் முகநூலில் காட்டப்பட்டுள்ள சுவாரசியமான விடயங் களை பார்த்தாள். தனது மனதினுள் எழும் ஏமாற்றத்தை அவளால் ஏனோ தவிர்க்க முடியவில்லை.

ஒரு வேகத்தோடு முகநூலை மூடி விட்டு தன் கைத்தொலைபேசியில் பதிந்திருந்த பாடல்களை ரசித்து கேட்க தொடங்கினாள்.

அடுத்த நாளும் மதனின் செய்தி முகநூலில் இருக்கவில்லை. ரதிக்கு குழப்பமாக இருந்தது.

"ஒருவேளை மதனுக்கு சுகமில்லை யோ. ஒரு மாதமாக விடாது துரத்தினானே. எத்தனை கவிதைகள். ரதிக்கு ஏற்ற மதன் தான் என்றானே. பெயர் பொருத்தத்தை பற்றி விளாசித் தள்ளியிருந்தானே. எப்படித்தான் அவன் முயன்றும் இவள் கொஞ்சமும் மனம் தளராததால் முடிவாக பின்வாங்கி விட்டானோ என்னவோ". ரதி ஆச்சரியமாக என்றும்போலல்லாது இன்று தான் மதனை பற்றிய எண்ணங்களில் ஆழத் தொடங்கினாள்.

முகநூலில் அவன் பதிவேற்றியிருந்த படங்களை மீண்டும் ஒரு முறை ஆர்வமாக பார்த்தாள். "ஆள் பார்க்க பரவாயில்லை. ஸ்டைலாக தான் இருக்கிறான்". சிரித்துக் கொண்டே மீண்டும் முகநூலை மூடினாள். மூன்றாவது நாள் எந்த எதிர்பார்ப்புமின்றி தன் முகநூலை திறந்தாள்.

"என்ன இது, சிவப்பு நிறத்தில் இன் போக்ஸ்ல் செய்தி ஒன்று மின்னுகிறதே". அவளையும் அறியாமல் நெஞ்சம் படபடக்க தொடங்கியது. தன்னை கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டே செய்தியை கிளிக் செய்து பார்த்தாள். மதன் தான் எழுதியிருந்தான். "ரதி நீ என்னை தேடி இருக்கமாட்டாய். ஆனாலும் நான் உன்னை தேடினேன். நான் ஒரு சிறுவிபத்தில் சிக்கியது உனக்கெங்கே தெரியப்போகிறது? ஆனாலும் நான் உன்னை நேசித்தவாறே வைத்தியசாலையில் இருந்தேன் என்பதை மட்டும் தெரியபடுத்த நினைத்தேன்". அவ்வளவு தான் அவன் செய்தி.

ரதி கொஞ்ச நேரம் அச்செய்தியை பார்த்து கொண்டு இருந்தாள். அவளது இதயம் அவள் கண் முன்னே பாகாக கரைவதையும் அப்பொழுது உணர்ந்தாள். கைகள் நடுங்க "இப்பொழுது எப்படி இருக்கிறீர்கள்? காயம் பலமோ? என்று பதில் எழுதி அனுப்பி வைத்தாள். கொஞ்ச நேரம் மதனிடமிருந்து பதில் வாராது இருக்க, ரதி ஆர்வத்து டனேயே செய்திப் பெட்டியை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அவள் இதயம் தன் கட்டுப்பாட்டை இழக்கிறதே என்ன செய்யப்போகிறாள் என்று யோசிக்க தொடங்க முன் மதனின் செய்தி வந்து விழுந்தது. "என் ரதியே, என் கண் முன் தெரிவது உன் எழுத்துகளா அல்லது வேறு யாராவது உனக்காக எழுதுகிறார்களா? சொல்லு ரதி, நான் விபத்தில் சிக்கி என் உயிரை பணயம் வைத்தபின் தான் நீ கொஞ்சம் இரங்கு கிறாய் போலும். பரவாயில்லை நான் அந்த விபத்தை உண்டாக்கிய கார் காரனுக்கு தான் நன்றி சொல்ல வேண்டும்" என்று சிரிக்கும் சித்திரத்தை அனுப்பி வைத்தான். ரதி வாய் விட்டுச் சிரித்து விட்டாள்.

அன்று, இப்பொழுது நீங்கள் நலமா? என்று அக்கறையாக விசாரிக்க தொடங்கிய முகநூல் நட்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாகவும் வளர்ந்து தொடர்ந்தது. இருவரும் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டு பேச தொடங்கி தமக்குள் பல ஒற்றுமைகளை உணர தொடங்கினர். சாட்டின் (chat) போது ஒருவரின் மேல் ஒருவர் ஈர்ப்பும் கொண்டனர்.

ரதி மெல்ல மெல்ல அவனிடம் காதல் கொள்ளத் தொடங்கினாள். காலை எழுந்தவுடனே முதல் வேலையாக மதன் தனக்கு குறுஞ்செய்தி அனுப்பியிருக்கிறானா என்று பார்ப்பதை வழமையாக்கினாள். அதேமாதிரியே தன் வேலையிடத்திலும் அடிக்கடி தன் கைத்தொலைபேசியை பார்க்க தொடங்கினாள். மதனும் சிறு சிறு காதல் செய்திகளாகவே குறும்பாக அனுப்புவான். அவனும் ரதி தான் தன் வருங்கால மனைவி என்று தீர்மானமே செய்து விட்டான்.

இப்படியே ஒரு நாள் அவன் மிகவும் கஷ்டப்பட்டு ரதியை முதல் முறையாக நேரில் சந்திக்க சம்மதிக்கவும் வைத்தான். ரதி முதலில் தயங்கினாலும் மதனை நேரில் காணும் ஆவலில் குறித்த ஒரு நாளை தேர்ந்தெடுத்து அவனை சந்திப்பதற்கு ஆமோதித்தாள். இருவரும் உற்சாகத்துடன் அந்நாளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் முதன் முதலாக சந்திக்கும் நாளும் வந்தது. ரதி பெயருக்கேற்ற அழகியாதலால் அன்று மிகுந்த அக்கறையுடன் தன்னை மேலும் அலங்கரித்து கொண்டாள். கண்ணாடி முன் நின்று பார்க்கையில் நிச்சயம் தன் அழகு மதனை கவரப் போகிறது என்று சொல்லி சிரித்துக்கொண்டாள். மதனும் ஒரு பூங்கொத்துடன் இவளுக்காக அவர்கள் ஏற்கனவே சொல்லி வைத்த காபி ஷோப்பில் காத்துக் கொண்டிருந்தான்.

ஒரு பேரழகி தயங்கியபடியே உள்ளே நுழைவதை கண்டவன் முகநூலில் இவள் பதிவேற்றியிருந்த படத்தை கொண்டு இவள் தான் ரதி என்பதை கண்டு கொண்டான். அவள் அழகு இவனை திக்குமுக்காட வைத்தது. உடனே எழும்பி இவள் அருகே வரும்வரை காத்து நின்று பூங்கொத்தை அவள் கையிலும் கொடுத்தான். மதனும் மிகவும் வாட்டசாட்டமான இளைஞன் தான். ரதிக்கும் மனதினுள் சந்தோசம். தன் எதிர்கால துணைவன் பார்ப்பதற்கு அழகானவன் என்று நினைத்தபடியே கொஞ்சம் வெட்கம் கலந்த புன்னகையுடன் இருக்கையில் அமர்ந்தாள்.

மதன் தான் முதலில் பேசத் தொடங்கினான். "தான் எப்படி அவள் பால் கவரப்பட்டான்" என்று கூற தொடங்குகை யிலேயே அவர்கள் இருவராலும் தொடர்ந்து கதைக்க முடியாது போய்விட்டது. இவளுக்கும் என்ன அவனிடம் கேட்பது என்றும் புரியவில்லை. மதனும் மிகவும் சங்கடப்பட்டான். முகநூலில் மணிக் கணக்காக பேசியவர்கள் ஒருவரை ஒருவர் நேரில் கண்டவுடன் பேச முடியாது மிகவும் சங்கடப்பட்டார்கள். தங்களுக்குள் ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதாக நினைத்து கொண்டிருந்தவர்கள் நேரில் சந்தித்தவுடன் அந்த கவர்ச்சி அப்படியே மறைவதாக உணர்ந்தனர்.

இருவருமே தங்களுடைய துணை என்று நினைத்து மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்தவர் கள் நேரில் சந்தித்தவுடன் இருவருக்குமே அது சந்தேகத்தை கொடுத்தது. இருவருமே அழகில் குறைவில்லை. குணத்திலும் குறை கூற முடியாத நல்லவர்கள். ஆனால் ஏதோ ஒன்று அவர்களிருவரிடமிருந்து விடைபெற்று விட்டது. சும்மா நண்பர்கள் போல் ஒரு கப் காபியுடன் சாதாரணமாக கதைத்து விட்டு விடைபெற்றுக்கொண்டனர். தங்கள் வாழ்க்கையை பங்கு போடும் துணை தாங்கள் இருவருமில்லை என்பதை உணர்ந்து மனம் லேசாக நண்பர்களாக பிரிந்து சென்றனர்.

மதனுக்கும் ரதிக்கும் ஏற்பட்ட முகநூல் நட்பு முகநூலுடனே முடிந்து விட்டது.

தொடரும்...



மீரா குகன்
ஜேர்மனி

# தோல்வியில்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

நடிகர் கப்டன், அரசியல்வாதி கப்டன் – இருவரில் யாரை உங்களுக்கு அதிகம் பிடிக்கும்?



நடிகர், அரசியல்வாதி என்பதைவிட கப்டனை ஒரு நல்ல மனிதராக, மனித நேயராகப் பிடிக்கும். படங்களில்தான் அவர் மேக்கப்போட்டு நடிக்கிறார். ஆனால், மக்கள் மத்தியில் நடிக்கத் தெரியாதவர். பிரபல மான நடிகராக இருந்த காலத்திலிருந்து இன்றுவரை கப்டன் வேட்டி சட்டைதான் அணிந்து வருகிறார். அது அவரது எளிமையின் அடையாளம். எதையும் வெளிப்படையாகப் பேசக்கூடியவர். தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக கப்டன் வந்தபிறகுதான் நஷ்டத்தில் இருந்த நடிகர் சங்கத்தை மீட்டு லாபத்தில் இயங்க வைத்தார். அவருடைய நிர்வாகத் திறமை மெச்சத்தக்கது. தமிழகத்தில் அவருடைய ஆட்சி அமைந்தால், அதை விடச் சிறப்பாக வேறு யாராலும் செய்ய முடியாத ஆட்சியைத் தருவார் என்பது நிச்சயம்.

ஃபேஸ்புக், டிவிட்டர், வாட்ஸ் அப் உட்பட சமூக வலைத்தளங்களில் கப்டன் பற்றி நிறைய மீம்ஸ்கள் பகிரப்படுகிறதே, பார்ப்பீர்களா?

நாங்கள் அதையெல்லாம் கண்டுகொள்வ தில்லை. பொழுதுபோக்குக்காகவும் பிரபலம் ஆகவேண்டும் என்பதற்காகவும் அதனை செய்கிறார்கள். ஃபேஸ்புக், வாட்ஸ் அப், டிவிட்டரில் இந்த மீம்ஸ்களைப் பரப்புற கிறவர்களில் எத்தனைப் பேர் வாக்குச் சாவடிக்குச் சென்று ஓட்டுப்போட்டிருப்பார் கள். சமூக வலைதளங்கள்தான் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் என்றால் நாங்கள்தானே வெற்றி பெற்றிருக்க வேண்டும். அந்தளவுக்கு தேமுதிக – மக்கள் நலக் கூட்டணிக்கு சமூக வலைதளங்களில் ஆதரவும் இருந்ததே.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளினாலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# வாழும்போதே...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

அறிந்ததும் போதகர் பிரெட் கப்புச்சினோ அவர்களை தங்கள் கிறிஸ்தவ மதப் பிரிவிலிருந்து நீக்கினார்கள். பின்னர் அவர் யூனிட்டேரியன் கிறிஸ்தவ மதப்பிரிவிற்கு மாறிச் சில மாதங்களில் அங்கும் போதகர் ஆனார்.

1957 ஆம் ஆண்டு தங்கள் இரண்டாவது சொந்த மகன், பியர் செரேசோலி (Pierre Ceresole) பிறந்தார். அவர்கள் இருவருக்கும் மொத்தம் சொந்தமாக இரண்டு குழந்தைகள் பிறந்திருந்தனர். இவர்களது தத்தெடுத்த இன்னுமொரு மகள், அன்னி லாரி (Annie Laurie) பயந்த சுபாவ முடையதும் காலில் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யக்கூடிய குறைபாடு கொண்ட கொரியா நாட்டுப் பெண் குழந்தை. அதையடுத்து அமெரிக்கா வில் கலப்பு இனப் பெற்றோருக்குப் பிறந்த ஆண்பிள்ளை ஒன்றும் அமெரிக்காவில் இலங்கைத் தமிழருக்குப் பிறந்த மோகன் என்ற ஆண்பிள்ளை உடன் சேர்த்து இருவரையும் தத்தெடுத்தனர். திபிகி (Tibiki) என்ற கனேடிய முதல் குடி மக்களிலிருந்து ஒரு பெண்பிள்ளை உட்பட மொத்தம் ஐந்து பெண் பிள்ளைகளும் வீட்டில் தத்தெடுத்து சேர்க்கப் பட்டார்கள். இப்படியாக அடுத்து பத்தாண்டுகளில் கொரியா, இந்தியா, ஹொங்கொங், பங்களாதேஷ், பார்படாஸ் (Barbados), கனடா மற்றும் அமெரிக்கா வில் இருந்து 19 ஆண் மற்றும் பெண் பிள்ளைகளை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. அவர்களது 2 சொந்த பிள்ளை களுடன் மொத்தம் 21 பிள்ளைகளை வளர்த்தார்கள்.

தத்து கொடுப்பது என்பது பெற்ற தாய் தந்தையினருக்கு வேறு வழிகள் ஏதும் இன்றி தன் குழந்தை எங்கேயாவது வளர்ந்து நன்றாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் தான் இருந்திருக்கும். தத்தெடுப்பதும் மிகக் கடினமானது. அரசாங்க கட்டுப்பாடுகள் ஒருபுறம், வளர்ப்பதற்கு மனம், வருமானம், நேரம், அர்ப்பணிப்பு, இரக்கம் என்று பல தேவை. பிரெட் – பொனி தம்பதியினரிடம் இவை தாராளமாக இருந்ததுதான் காரணம்.

ஒவ்வொரு பிள்ளைகளையும் தத்தெடுப்பதற்குப் பின்னணியில் ஒரு சோகக் கதை-யொன்று இருக்கிறது. எல்லாவற்றையும் கூறுவது நல்லதுமல்ல நோக்கமுமல்ல.

1967 இல், தாராளக் கொள்கையுடைய பிரெட் (Fred) ஐ கியூபெக் மாகாணத்தில் உள்ள பொயின்ற் கிளையர் (Pointe-Claire) நகரில் ஒரு யூனிட்டேரியன் கிறிஸ்தவ மதச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி அவருக்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்று சிக்காக்கோவிலிருந்து கியூபெக் வரும்போது தனது பெரிய குடும்பத்தையும் கூட்டி வந்தார். சிறிய வாடகை வீட்டில் பிள்ளைகளுக்கு மரத்தால் அமைத்த ஒன்றுக்கு மேல் ஒன்றாக அமையும் படுக்கைகள். ஏணிகளின் உதவியுடன் ஏறிப்படுத்துப் பழகிக் கொண்டார்கள். எல்லோருக்கும் ஒரே சத்துள்ள உணவு தான். அவர்கள் விளையாட அவ்வளவு இடம் போதாது தான். சமாளித்தார்கள்.

1970 இல், பிரெட் – பொனி தம்பதியினர் மொன்றியலுக்கும் ஒட்டோவாவுக்கும் இடையே மாக்ஸ்வில் Maxville, Ontario என்ற சிறு கிராமத்தில் ஒரு 40 ஹெக்டேயர் விவசாய நிலத்தைப் பண்ணை வீட்டுடன் வாங்கிக் குடியேறினார்கள். இங்கு எல்லோருக்கும் வசதிகள் கூடுதலாகக் கிடைத்தது. தங்களுக்குப் பிறந்த இருவர் உட்பட 21 குழந்தைகள் அனைவரையும் மாக்ஸ்வில், ஒன்ராறியோவில் உள்ள தமது பண்ணை வீட்டில் வைத்து வளர்த்தார்கள். இவர்கள் சலிக்காமல் சோர்வடையாமல் 21 பிள்ளைகளையும் வளர்த்து வந்தார்கள்.

பிரெட் - பொனி தம்பதியினர் 1976 இல் கனேடிய குடிமக்களானார்கள். தம்பதியினர் 1985 இல் தாய்லாந்தில் உள்ள ஒரு முகாமில் அமெரிக்கா - வியட்நாம் யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட வியட்நாம் குழந்தைகள் பலர் தவிக்கிறார்கள், அவர்களைக் கொண்டுவர அனுமதி கேட்டு கனடா அரசாங்கத்தை வற்புறுத்தினார்கள். 100 வியட்நாம் குழந்தைகளைக் கொண்டுவர கனடா அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி அளித்தது. உடனடியாக பண்ணை வீட்டுடன் இன்னொரு அறையைக் கட்டி சேர்க்கப்பட்டு, 12 வியட்நாம் குழந்தைகளைக் கூட்டி வந்து



ஏற்கனவே உள்ள 21 பிள்ளைகளுடன் தற்காலிகமாகத் தங்க வைக்கப் பட்டார்கள். பிள்ளைகளது நலன் கருதி கனேடிய அரசாங்கம் சில நிபந்தனைகளை முன் வைத்ததனால் அனாதைப் பிள்ளைகள் மீது அவர்களது கவனம் விரிவு பெற்றது.

1985 இல் ரொறொன்ரோவில் சைல்ட் ஹேவன் இன்ரநெசனல் (Child Heaven International) என்ற தரும (Charity Organization) ஸ்தாபனத்தை நிறுவி அதனூடாக தத்தெடுப்பதை விரிவுபடுத்தினார்கள். இவர்களது முயற்சியை அறிந்து சில நல்ல உள்ளம் படைத்தவர்கள் பணமாகவும், பிள்ளைகள் கல்விக்குப் பாடப் புத்தகங்களாகவும், உடைகளாகவும் உதவி வருகிறார்கள். சிலர் தொண்டர்களாக சேர்ந்து உதவி வருகிறார்கள். அவர்கள் பணம் கேட்டு விளம்பரம் செய்ததே இல்லை. தங்கள் கண்களால் பார்த்தவர்கள் மற்றவர்களுக்கு சொல்லிச் சொல்லி ஆதரவு கிடைத்து வருகிறது.

இன்று சைல்ட் ஹேவன் இன்ரநெசனல் என்ற ஸ்தாபனம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு இந்தியாவில் குஜராத், ஹைதராபாத், காஞ்சிபுரம், புதுடெல்லி உட்பட ஆறு பராமரிப்பு மையங்களும் மற்றும் சீனா, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் திபெத் ஆகிய நாடுகளில் ஒவ்வொரு பராமரிப்பு மையங்களும் மற்றும் டெல்லி அருகே காஜியாபாத் என்ற நகரில் 50 பெண்களுக்கு ஒரு பயிற்சி மையமும் நிறுவி நடத்தி வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அவர்களது கலியாம்பூஞ்சி மையத்தில் மட்டும் 297 தமிழ் பேசும் ஆண் பிள்ளைகளும் 35 தமிழ் பேசும் பெண்களும் பராமரிக்கப் படுகிறார்கள். ஆண்கள் பெண்கள் தங்கத் தனித்தனிக் கட்டிடங்கள் உண்டு. மதமாற்றம் செய்யப்படுவதில்லை. பிரார்த்தனை நேரம் உண்டு. எல்லா மத கடவுள்களின் பெயர்களை சொல்லி தங்களை ஆசீர்வதிக்கும்படி வேண்டுவார்கள். நூலகம் உண்டு, விளையாட சிறு மைதானம் உண்டு, மாலையில் இரவில் பாடம் சொல்லிக் கொடுக்க உள்நாட்டு வெளிநாட்டு தன்னார்வத் தொண்டராக சில பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு தங்கி உதவுகிறார்கள். இத்தொண்டர்கள் அங்கு வாழும் பிள்ளைகளை அருகிலுள்ள பாடசாலைகளுக்கு காலை கூட்டிச் சென்று விட்டு மாலை கூட்டிவருவார்கள். சேர்ந்து விளையாட்டு மற்றும் கலைகள் சொல்லிக் கொடுப்பார்கள். சுகாதாரத்தையும் கடைப் பிடிக்கச் சொல்லிக் கொடுப்பார்கள். பெரிய பெண்கள் சமையல் சாப்பாடு விடயங்களில் உதவுவார்கள். 1 வருடத்திற்கு பிள்ளை ஒன்றுக்கு 4 உடைகள் கொடுக்கிறார்கள். தொண்டு அடிப்படையில் மற்றைய வேலைகள் கவனிக்கப்படுகின்றன. இங்கு உள்ள முறைகள் போல மற்றைய மையங்களில் சமமான முறைகள் நடைமுறையில் உள்ளன. பிள்ளைகள் சந்தோசமாக வளர்கிறார்கள்.

இது ஆப்கானிஸ்தான் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளில் ஒரு சில குழந்தைகளுக்கும் அத்துடன் 48 கைவிடப்பட்ட வயோதிபருக்கும் உதவுகிறது. கூடுதலாக சைல்ட் ஹேவன் இன்ரநெசனல் தெருவில் வாழும் குழந்தைகளையும் ஆதரிக்கிறது. 10ஆம் தரம் வரையில் அவர்களது மையங்களில் வைத்து உணவு உடை கல்வி மருத்துவம் சுகாதாரம் உடல் பயிற்சி புத்தகம் பென்சில் பொழுது போக்கு உட்பட முழு உதவிகளும் பிள்ளைகளுக்குக் குறைவில்லாமல் செய்து வருகிறார்கள். உயர்கல்வி மேற்படிப்பு போக விரும்பும் பிள்ளைகளுக்கு மட்டுப் படுத்தப் பட்ட உதவிகள் செய்து வருகிறார்கள். இம் மையங்களிலிருந்து படித்து நல்ல நிலைக்கு வந்த பலர் இந்த மையங்களுக்கு வாரி வழங்கி வருவதால் இன்றும் மையங்களின் வளர்ச்சி குறையாமல் இருந்து வருகின்றது. அது மட்டுமல்ல தனியார் நன்கொடைகளில் இருந்து வரும் ஒவ்வொரு பென்னி பணத்தையும் 90 வயதான பிரெட் கனடாவிலிருந்து கவனிக்கிறார், செயல் படுத்துகிறார். 81 வயதான பொனி ஆசியாவில் உள்ள எல்லா மையங்களுக்கும் ஒரு ஆண்டுக்கு நான்கு முறை பயணம் செய்து கணக்குகள் சரிபார்த்து பிள்ளைகளுக்கு அன்பளிப்புக்களைக் கொடுத்து அவர்களுடன் தங்கி குறை நிறைகளை கேட்டறிந்து தீர்த்து வருகின்றார் இந்தத் தாய். அங்குள்ள பிள்ளைகள் பெண்கள் மட்டுமல்ல எல்லோரும் பொனி அம்மாவை அன்பாக பொனிமா என்றழைப்பார்கள். அவர் இந்திய கலாச்சாரத்தை விரும்புகின்ற தாய். விரும்பி அணிவது சேலை. புத்தரது போதனைகளை பின்பற்று பவர். முதலில் தத்தெடுத்து வளர்த்த 19 பிள்ளைகளில் லக்சுமி, மோகன், அசோக், என்ற 3 இந்துப் பிள்ளைகளும் அடங்குகிறார்கள்.

வருடாவருடம் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்கு வளர்ந்த வீட்டிற்க்கு 21 பிள்ளைகளும் குடும்பமாக வந்து சேர்ந்து உணவாக்கி பகிர்ந்து சாப்பிட்டு கும்மாளம் போடும் காட்சி விபரிக்க முடியாது. அதனை கூடுதலாக ரசிப்பவர்கள் பிரெட் கப்புச்சினோ பொனி கப்புச்சினோ இருவரும் தான்.

மனிதநேயம் மரணித்து போகவில்லை. நமக்கு அன்னை தெரேசா கிடைத்தது போல் நம்நாட்டு அன்னை பொனி உடன் கணவர் நம்நாட்டு தந்தை பிரெட் கப்புச்சினோ கிடைத்து உள்ளார்கள். இருவருக்கும் மனிதநேயப் பணிகளுக்காக உலக யுனெஸ்கோ ஸ்தாபனம் இருவரையும் கௌரவித்து மனிதநேயப் பணி உயர் விருதும், ஒன்ராறியோ மாகாண அரசால் சிறந்த குடிமக்கள் விருதும், கனேடிய அரசால் சிறந்த தொண்டர்கள் என்ற விருதும் பெற்றிருக்கிறார்கள்.

கனேடிய தம்பதியினர் பிரெட் கப்புச்சினோ, பொனி கப்புச்சினோ இருவருக்கும் மனிதநேயப் பணிகளுக்காக நாமும் அவர்களைப் பாராட்டுவோம். இவ்விரு பெருமக்களும் நீடூழி காலம் நோயற்றவாழ்வு வாழ இறைவனை வேண்டுவோம். அவர்களை வாழும்போதே வாழ்த்துவோம். இப் பணிதொடர எங்கள் அன்பும் ஆதரவையும் கொடுப்போம். Child Heaven International Charity ஸ்தாபனத்து தொண்டர்கள் அனைவரையும் பாராட்டுவோம். இவ்விரு பெருமக்களது கதையை சுருக்கி உங்களுக்கு சொல்வதில் எனக்கு ஒரு திருப்தி கிடைக்கிறது.


YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
NET WT./POIDS NET
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS**
**7 DAYS A WEEK**

**MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS**

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS
NEW TIRES FROM **$75**
USED TIRES FROM **$35**

## FREE OIL CHANGE WITH RUST PROOFING
**$99** Car
**$120** SUV

## BRAKE JOB
STARTING FROM
**$159**

## WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
**$450** Most Cars
**$550** Most Vans

## Castrol
REGULAR OIL CHANGE **$29.95**
CASTROL OIL CHANGE **$39.95**
SYNTHETIC OIL CHANGE **$49.95**
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR **$149.95**

## TRANSMISSION FLUSH
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK

BMW LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD
Design your dreams with us
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை வடிவமைப்பாளர்கள்
40 New Delhi Drive Unit 56 Markham, Ontario L3S 0B5
Tel: (905) 554-5890




















**Free Real Estate Class -** Call: **416.321.6969**












விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**


